

எங்கள்

# முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்

நவம்பர் 2025

விலை ரூ. 100/=

## சு.தவச்செல்வன் எழுதிய மூன்று நூல்கள் அறிமுக நிகழ்வு-யாழ்ப்பாணம்






## பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புத்தக கண்காட்சி





## மறுமலர்ச்சி மன்றம் - முன்பள்ளி மழலையர் சிறுவர் தின கொண்டாட்டத்தில்....







# எங்கள் முற்றம்

## கலை இலக்கிய சமூக இதழ்

**ஆசிரியர் : அழ. பகீரதன்**

**ISSN NO : 2783–8889**

**இதழ் : 08 நவம்பர் 2025**


*ஆடுதல், பாடுதல், சித்திரம் –கவி*
*யாதி யினைய கலைகளில் – உள்ளம்*
*ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்*
*ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்*
*நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில*
*நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்*
*காடு புதரில் வளரினும் – தெய்வக்*
*காவனம் என்றதைப் போற்றலாம்!*

*–பாரதி*


ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை பொறுப்பாகாது.



இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்

நிழற்படங்கள், அட்டை வடிவமைப்பு: எஸ். அனுஜன்

ஆலோசகர்கள் :

மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்

சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்

அச்சுப் பதிவு :
ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு

வெளியீடு :

**மறுமலர்ச்சி மன்றம்,**
**காலையடி, பண்டத்தரிப்பு.**

**மக்கள் கலை இலக்கியப் பேரவை**
**இல 68 நீதிமன்ற வீதி, மல்லாகம்.**



*Email : marumalarchy1972@gmail.com*
*T.P : +94 77 104 1945*


நாம் எங்கள் முற்றம் இதழின் எட்டாவத இதழினை பல சிரமத்தின் மத்தியிலும் உங்கள் கரங்களில் தவழவிடுகின்றோம்.

சென்ற இதழில் வீரகாவியம் என்ற தொடர் ஆறாவது இதழில் இடம்பெற்ற பகுதிகளே மீண்டும் பிரசுரமாகி உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியதையிட்டு மனவருத்தப்படுகின்றோம்.

சில்லையூர் செல்வராசன் பற்றிய குறிப்பில் பின அட்டையில் 30 வது ஆண்டு நினைவு நாள் அனுசரணை என வரவேண்டும் என்பதும் கவனத்துக்குரியதாகிறது.

நவம்பர் மாதத்தில் ஈழத்து கலை இலக்கிய உலகில் தங்களுடைய அழியாத் தடங்களைப் பதித்தவர்களில் முதன்மையானவர் குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்கள். அவரது முதலாவது ஆண்டு நினைவு தினம் நவம்பர் 15 ந் திகதி ஆகும். அவரது நினைவுகளை மீட்கும் வகையில் அட்டைப்படம் அவரது உருவைத்தாங்கி வருகின்றது.

மாவை வரோதயனின் 60 வது பிறந்த தினத்தைமுன்னிட்டு கொழும்பில் செம்புலம் மக்கள் கூடம் 16ந்திகதி நினைவு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நிகழ்வை நடத்துகின்றது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாட்டாளராக நீண்டகாலம் கொழும்பில் ஈடுபட்டவர்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாட்டாளராக செயற்பட்டு இளம் வயதில் தனது பயணத்தினை நிறுத்திக் கொண்டவர் வ. சிவஜோதி. அவரது 54வது பிறந்தநாள் (நவம்பர் 18) நினைவு கிளிநொச்சியில் நிகழவிருக்கின்றது.

‘எங்கள் முற்றம்’ இதழும் அவர்களை நினைவுகூர்வதோடு இந்த ஆண்டின் நான்காவது இதழினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்வதோடு புதிய பாய்ச்சலை நோக்கி நகர்வதற்கான திடசங்கற்பம் கொள்கிறது.

மீண்டும் டிசம்பர் இதழில் உங்களுடன் கலப்போம்.

ஆசிரியர்

## உள்ளே....


தென்புலத்தார் தொழுதேற்றல்

- எமது மண்ணின் மனச்சாட்சியாக வாழ்ந்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் குறுவரலாறு– ந. நவராஜ் –29
- வீரகாவியம் ‘ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை – 34

நூல் அறிமுகம்

- மூத்த தமிழ் ஊடகவியலாளரின் முக்கியமானதொரு புத்தகம் – எஸ். தனுஜன் – 30

கவிதைகள்

- விடுதலை என்பது வெளியில் இல்லை –கவிமேகம் காளமேகம் – 03
- என்னவென்று சொல்ல– இயலான் –07
- பயனுள்ள சிந்தனை– அழ. பகீரதன் –26

சிறுகதைகள்

- நான் என்ன சொல்ல – சாதாரணன் – 21
- ஹோமோன்ஸ் – நவயுகன் 27

இளையோர் அரங்கு

- பண்டைய வெளிநாட்டு அறிஞர் பார்வையில் இலங்கை–தொகுப்பு – சபா தனுஜன் –04
- ஐந்து ஆண்டுகளின் பின் கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் விடப்படும் அரசன் – காலைச் செஞ்சூரியன் – 08

ஆய்வு

- கடந்த கால அனுபவங்களை இரைமீட்கும் ஒரு காலத்தின் படிமங்கள் , ஏன் சிறுகதைத் தொகுப்பு
  – கந்தர் மடம் அ. அஜந்தன் – 23

சட்டம் தெரிவோம்

- அனைவரும் அறிந்திருக்க வேண்டிய சிறுவர் சட்டங்கள்–10

தொடர்

- வேதாளமும் முருங்கையும் – அசன் –38
- தீரணியனின் திருவிளையாடல் – செண்பகன் –08

இளையோர் இலக்கியம்

- அறிவுத் திறமையால் தந்தையின் தொழிற்சாலைகளை அடையப்பெற்ற மகன் –காலைச்செஞ்சூரியன் –32

மூத்தோர் படையல்

- கண்ணீரும் தண்ணீரும் –சிறுகதை – டொமினிக்ஜீவா –15

பயில்நிலம்

- எனக்கும் ஒரு தங்கை– சாதனா – 37


அட்டையில் :

நாடகர் குழந்தை ம. சண்முகலிங்கம்

### மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி சிறுவர்தின காட்சிகள்







# விடுதலை என்பது வெளியிலே இல்லை

கவிமேகம் காளமேகம்

தமிழர்க்கு என் வணக்கம்

மண்ணில் விடுதலை கிடைப்பது உறுதி –எங்கள்
மண்ணுக்கு விடுதலை கிடைப்பதும் உறுதி
எண்ணத்தில் ஏற்றம்–கை
வண்ணத்தில் மாற்றம்
மண்ணில் கழிவுகள் சேர்வதில் சீற்றம் –சொந்த
மனங்களில் கழிவுகள் சேர்க்காத ஏற்றம்
படை கொண்டு வந்தார் –இளைஞர்
படை கொண்டு வந்தார்

பூமித்தாய் புன்னகை பூத்துக் குலுங்கிட
புதிதாய் ஆடைஅணி பூட்டி மகிழ்ந்திட
புள்ளினம் வானிலே கானம் இசைத்திட
துள்ளியே குழந்தைகள் கூத்துக்கள் ஆடிட
படை கொண்டு வந்தார் –இளைஞர்
படை கொண்டு வந்தார்

அழிவுக்கு அல்ல ...
உயிரற்ற உடல்களை குவிப்பதற்கல்ல
சிதறிய உடல்களை சேர்ப்பதற்கும் அல்ல.
சாக் காடுகளை இனிமை தரும்
பூக் காடுகள் ஆக்குதற்கு
படை கொண்டு வந்தார் –இளைஞர்
படை கொண்டு வந்தார்

களைகள் பிடுங்குவது தர்மம் என்றே சிலர்
பிழைகள் மிகுந்திட கொலைகள் செய்தார் –அஞ்சாது
பிழைகள் மிகுந்திட கொலைகள் செய்தார்–முன்பு
பிழைகள் மிகுந்திட கொலைகள் செய்தார்
கண்ணபரமார்த்தாக்கள் செய்திட உபதேசம்
தன்கண்ணை தன் கைகள் பிடுங்கியது போல
உறவுகளை அழித்து
உடன்பிறப்பை அழித்து
நண்பரை அழித்த நயவஞ்சகர்கள் இவரென்று
நல்ல குருநாதர்களை தேடி அழித்தது.
கண்ண பரமார்த்த கதைகள் எமக்கினி ஏன் ?
இந்த அருச்சுனர்கள் இனி அவற்றை கேளார்.
அர்ச்சுனர்க்கு உபதேசம்அழிவுக்கே உபதேசம்
இன்றெழுந்த அருச்சுனர்கள் இனி அவற்றைக் கேளார்.
படை கொண்டு வந்தார் –இளையோர்
படை கொண்டு வந்தார்

கொலைகள் செய்யவதற்கு வரவில்லை
குருதியில் குளிப்பதற்கு வரவில்லை
படை கொண்டு வந்தார்
இளையோர் படை கொண்டு வந்தார்

வீரியம் என்பதற்கு இலக்கணம் வேறு
விடுதலை என்பதற்கு இலக்கணம் வேறு
வாழ விதை நாட்டுவது
வாழ்க்கையைக் கூட்டுவது
வாழ்விழந்த விதவைக்கும்
வாழ்க்கைத்துணை மீட்டுவது.
வீழ்ந்த மரங்களை மீள உயிர் நாட்டுவது
பசியுற்றோர் பசி தீர்த்து
நோயுற்றோர் நோய் தீர்த்து
உயிக்கொடுப்போர் வீரர்கள் .
உறவுகளின் கண்ணீர் ஊற்றுக்கண்
மென்விரலால் மூடுபவர் வீரர்கள்

போராட்டம் என்பதன் அர்த்தங்கள் புதிது
பிளாஸ்டிக் கழிவுகள்...பூமித்
தாயவள் மடியிலே பிளாஸ்டிக் கழிவுகள்... என்று
போரிட வந்தவர் வீரர்கள்தானே
பூமிப்பந்தின் புண்கள் ஆற்றிட
புதிதாய் வந்த மருத்துவர் இவர்கள்
படை கொண்டு வந்தார் –இளையோர்
படை கொண்டு வந்தார்

இந்தப்படையணி நாங்களும் சேருவோம்
விடுதலை என்பது வெளியிலே இல்லை
குளங்களை தூர் எடுப்போம் – மழை
நீரினைத் தேக்கிடுவோம் –ஆழக்
கிணறுகள் தோண்டிடுவோம் – ஊற்றுக்
கண்கள் திறந்திடுவோம்.
மரக்கன்றுகள் பல நடுவோம்– குளிர்த்
தென்றலை வரவழைப்போம்
மரங்களை அழிப்பதில்லை –நல்ல
பசுமை கெடுப்பதில்லை –நல்ல
செயல்களை தடுப்பதும் இல்லை
வேம்புக்கு இலக்கணம்–அந்த
வேரின் உறுதி அன்றோ
மனங்களில் பொய்மையில்லை
இந்த மாந்தர்க்கு உறுதியன்றோ
விடுதலை என்பது வெளியிலே இல்லை

# பண்டைய வெளிநாட்டு அறிஞர்கள் பார்வையில் இலங்கை

## பகுதி 01




**தொலமி வரைந்த இலங்கை வரைபடம்**

## கிறிஸ்துக்கு முன் வாழ்ந்த கிரேக்க அறிஞர் மெகஸ்தெனஸ் அவர்களின் குறிப்பிலிருந்து



**மெகஸ்தெனஸ்**

கி.மு. 350 – கி.மு. 290 வரை வாழ்ந்த மெகஸ்தெனஸ் (Megasthenes) கிரேக்கத்தைச் சேர்ந்த பயணியும், புவியியலாளருமாவார். இவர் இந்தியாவின் பாடலிபுத்திரத்தில் இருந்த சந்திரகுப்த மௌரியனின் அரசவையில், செலுசிட் பேரரசர் செலுக்கசு நிகோடரின் தூதுவராக இருந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவர் அக்காலத்தில் சிறந்து விளங்கிய பாண்டியர்களின் தலைநகரான மதுரைக்கும் சென்றதாகத் தெரிகிறது. தான் இந்தியாவில் கண்டவற்றை இண்டிகா என்னும் அவரது புத்தகத்தில் பதிவுசெய்துள்ளார். அதில் இமயமலை, இந்தியாவின் சாதி முறை, இலங்கைத் தீவு போன்றவை பற்றியும் விளக்கியுள்ளார்.

இலங்கையைத் தப்ரபானே எனக் குறிப்பிட்டுள்ளார். (தம்பபன்னி அல்லது தப்ரபேன் என்பதன் திரிபடைந்த வடிவமாக இருக்கலாம். இப் பெயர் தென் தமிழகத்தின் பொதிகை மலையில் தோன்றி இலங்கை இருக்கும் திசையில் மன்னார் குடா கடலில் கலக்கும், வற்றாத ஜீவ

நதிகளில் ஒன்றும், நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்து முக்கியத்துவம் வழங்கிப் பேசப்பட்டு வருவதுமான தாமிரபரணி நதியின் பெயரில் இருந்து வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.) என்று குறிப்பிட்டுள்ள இவர், தப்ரபானேயிற்கும் தலைநிலத்திற்கும் (இந்திய உபகண்டம்) இடையில் ஓர் ஆறு ஓடுவதால், தப்ரபானே தலைநிலத்தில் இருந்து பிரிந்து நிற்கின்றது என்றும், இந்தியாவில் கிடைப்பதைக் காட்டிலும் அதிகமான பொன்னும் முத்தும் அங்கே கிடைக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். அந் நாட்டின் ஒரு பகுதியில் காட்டு விலங்குகளும் யானைகளும் வசிக்கின்றன. அவை இந்திய விலங்குகளைக் காட்டிலும் பெரியவை. இன்னொரு பகுதியில் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் பலையோகோனாய் (இது பாளி ஜனங்கள் என்ற தொடரின் மருவிய வடிவம் எனவும், புனிதக் கொள்கையைப் பின்பற்றும் மக்கள் என்ற பொருள்படும் எனவும் மெக்ரிண்டில் விளக்கியுள்ளார்.) என்று அழைக்கப்படுகின்றார்கள் என்றும் எழுதிவைத்துள்ளார்.




இனி அவரது குறிப்பை நேரடியாகப் பார்ப்போம்.

தப்ரபானே என்று அழைக்கப்படும் அந்தத் தீவு மிகவும் நீளமானது என்றும் மலைப்பாங்கானது என்றும் நான் கேள்விப்பட்டேன். அங்கே நகரங்களே இல்லை. மக்கள் அனைவரும் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். அங்கு மொத்தம் 750 கிராமங்கள் இருக்கின்றன. மக்கள் மரத்தால் ஆன வீடுகளில் விசிக்கிறார்கள். சில வீடுகள் நாணல், புல் முதலியவற்றாலும் கட்டப்பட்டுள்ளன.

தீவுகளைச் சூழ்ந்துள்ள கடலில் ஆமைகள் இருக்கின்றன. அவ் ஆமைகள் மிகமிகப் பெரியவை. எனவே, அவற்றின் ஓடுகளை மக்கள் வீட்டுக் கூரைகளாகப் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வோர் ஓடும் 15 முழ நீளமானது. அதனால் அதற்கு அடியில் பலர் தங்கி, சூரிய வெப்பத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். ஆமை ஓடு தருகின்ற குளிர் நிழலை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அதற்கும் மேலாக, ஆமையோட்டுக் கூரை கடும் மழையில் இருந்து மக்களைக் காக்கிறது. சாதாரண ஓடு வேய்ந்த கூரையை விடவும் ஆமையோட்டுக் கூரை சிறந்தது. அதன்மீது விழுகிற பெரும் மழை நீர் எளிதில் வழிந்து ஓடிவிடுகின்றது. அதன் கீழ் இருக்கின்ற மக்கள் மழையின் சடசட என்ற பேரொலியைக் கேட்கிறார்கள். ஆனால், அவர்கள்மீது ஒரு சொட்டு நீரும் விழுவதில்லை. பெரும் மழை பெய்தால் சாதாரண கூரை ஓடுகள் உடைந்து போவதைப் போல, ஆமையோட்டுக் கூரை உடைந்துபோவதில்லை. ஆமையோடு மிகவும் உறுதியானது. பாறையைக் குடைந்தது போல இருக்கும்.

அந்தத் தீவில் ஏராளமான தென்னந் தோப்புகள் இருக்கின்றன. தோப்புகளில் உள்ள தென்னை மரங்கள் வரிசை வரிசையாகவும் ஒழுங்காகவும் வளர்க்கப்பட்டுள்ளன. அந்த ஒழுங்கைப் பார்க்கும்போது, வியப்பும் மலைப்பும் ஒருங்கே தோன்றும். அவை ஒரு பூங்காவிலே அழகுக்காக வளர்க்கப்படும் மரங்கள் போன்று காட்சிதருகின்றன.

அங்கு யானைகள் கூட்டங் கூட்டமாக இருக்கின்றன. அவை மிகவும் பெரியவை. பலம் மிக்கவை. எல்லா வகையிலும் நுண்ணறிவு மிகுந்தவை. தீவில் வாழும் மக்கள் அந்த யானைகளைப் பிடித்து தலைநிலத்திற்கு (இந்தியாவிற்கு) ஏற்றுமதி செய்கிறார்கள். அதற்காக அவர்கள் தனிப் படகுகளைக் கட்டுகிறார்கள். படகுகளுக்கு வேண்டிய மரம் தீவிலுள்ள காடுகளில் கிடைக்கின்றது. யானைகள் அனேகமாக கலிங்க நாட்டு மன்னனுக்கு விற்கப்படுகின்றன.

தீவு மிகவும் பெரிதாக இருப்பதால், உள்நாட்டில் வாழும் மக்கள் கடலைக் கண்டதேயில்லை. தீவைச் சுற்றிலும் கடல் இருக்கிறது என்று மற்றவர்கள் அவர்களிடம் சொல்கிறார்கள் என்பது உண்மையே. அதுபோலவே கரையில் வாழும் மக்களுக்கு யானை வேட்டையைப் பற்றிய நேரடி அனுபவம் கிடையாது. அதைப் பற்றி மற்றவர்




சொல்வதைத்தான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நேரமெல்லாம் கடலில் மீன் பிடிப்பதிலும், ஆழ் கடலில் வாழும் பேருருவ விலங்குகளை வேட்டையாடுவதிலுமே கழிகின்றது.

தீவைச் சூழ்ந்துள்ள கடலில் கணக்கில் அடங்கா மீன்கள் இருக்கின்றன. பெரிய மீன்கள் சிலவற்றுக்கு சிங்கத் தலையும், சிலவற்றுக்கு சிறுத்தைத் தலையும், சிலவற்றுக்கு ஆட்டுக்கிடாய்த் தலையும் இருக்கின்றன. இன்னும் எத்தனையோ வகையான காட்டு விலங்குகளைப் போன்ற மீன்களும் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் விட வியத்தகு செய்தி என்னவெனில், சில மீன்கள் சற்றயரின் (குதிரைக் காதுகள், கொம்பு, ஆடு போன்ற இரண்டு கால்கள், வால், மனித வடிவம் உடைய கிரேக்க வன தெய்வம். புல்லாங்குழல் வாசிக்கும்.) உருவைப் பெற்றிருப்பதுதான். சில மீன்கள் பெண்களைப் போல் இருக்கின்றன. ஆனால், அவற்றுக்குத் தலைமயிர் இல்லை. அதற்குப் பதிலாகப் முள் கற்றைகள் இருக்கின்றன.

இந்தக் கடலில் விசித்திரமான உருவுடைய விலங்குகள் இருக்கின்றன என்றும், அவற்றைப் படத்தில் வரைந்து காட்ட எந்த ஓவியனாலும் இயலாது என்றும் சொல்கிறார்கள். அந்த விசித்திர விலங்குகளுக்கு வால் இருக்கிறது என்றும், பிற பகுதிகள் சுருண்டும் மிக நீண்டும் இருக்கின்றன என்றும், கால்களுக்குப் பதிலாக வளை நகங்களும் துடுப்புப் போன்ற உறுப்புகளும் இருக்கின்றன என்றும் சொல்கின்றனர். அவை நீரில் மட்டுமன்றி நிலத்திலும்



வாழ்கின்ற விலங்குகள் என்றும், இரவில் அவை ஆடு மாடுகளைப் போல மேய்ச்சல் நிலத்தில் இருக்கின்ற புல்லை மேய்கின்றன என்றும், பறவைகளைப் போல விதைகளையும் பருப்புகளையும் பொறுக்கித் தின்கின்றன என்றும் கேள்விப்படுகின்றேன். பேரீச்சம் பழத்தை அவை மிகவும் விரும்புகின்றன. பேரீச்சம் பழம் முற்றிக் கனிந்திருக்கும்போது, அந்த விலங்குகள் தமது சுருள் உறுப்புகளால் மரத்தைச் சுற்றி வளைத்துக் கொள்கின்றன. அவ் உறுப்புகள் எளிதில் வளையக்கூடியவையாகவும், உறுதியானவையாகவும் இருக்கின்றன. பின்னர் அவை மரத்தை வேகமாகவும் வலிமையாகவும் ஆட்டுகின்றன. அந்த ஆட்டத்தின் வேகத்தில் மரத்திலிருக்கும் பழங்கள் கீழே விழுகின்றன. அவ்வாறு உதிர்கின்ற பழங்களை அவை ஆவலோடு தின்று மகிழ்கின்றன. பின்னர் இரவு முடிந்து விடியத் தொடங்கும்போது, அவை கடலுக்குள் மூழ்கி மறைந்துவிடுகின்றன.

திமிங்கிலங்களும் இந்தக் கடலில் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், அவை கரைக்கு அருகில் வந்து சூரை மீன்களுக்காகக் காத்திருக்கின்றன என்பது உண்மையன்று.

இந்தக் கடலில் இரு வகையான கடற்பன்றிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஒரு வகையைச் சேர்ந்தது மூர்க்கமானது என்றும், மிகக் கூர்மையான பற்களை உடையது என்றும், இரக்கமற்ற கொடிய இயல்புடையது என்றும் சொல்கிறார்கள் (அது சுறா மீனாகவோ அல்லது திமிங்கில வகையைச் சேர்ந்த ஒன்றாகவோ இருக்கலாம்). ஆனால், இரண்டாம் வகையைச் சேர்ந்த கடற்பன்றி இயற்கையாகவே மென்மையானது என்றும், மகிழ்ச்சியாகத் துள்ளி விளையாடும் இயல்புடையதென்றும், வாலைக் குழைக்கும் நாயைப் போலப் பழகக் கூடியதென்றும் சொல்கிறார்கள். அதனை யார் வேண்டுமானாலும் தடவிக் கொடுக்கலாம். ஆளைக் கண்டு ஓடாது. தின்பண்டம் ஏதாவது கொடுத்தால் அதனை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்கிறது. (இது டொல்பினாக இருக்க வாய்ப்புள்ளது.)

**தொகுப்பு: சபா. தனுஜன்**

---

பாடல்

# என்னவென்று சொல்ல...

*என்னவென்று சொல்ல*
*உலகம்படும் பாட்டை*
*ஆளையாள் கொல்லுது*
*அலுப்பைத் தீர்க்குது*
*—என்னவென்று...*
*மனிசர்படும் பாட்டை*
*கேடுகெட்ட கேட்டை*
*பேராசைக் கோட்டை*
*பிடிக்கவோ வேட்டை*
*ஐயோ... ஐயோ... ஐயையோ.*
*—என்னவென்று*
*வீதியிலை போனா*
*வீணான சாவு*
*விலைவாசி ஏறுது*
*விசராய் வருகுது*
*ஐயோ.. ஐயோ.. ஐயையோ.*
*—என்னவென்று*
*போதைக் கொடுமை*
*பிடிபடுற பெரும் புள்ளி*
*கரும்புள்ளி செம் புள்ளி*
*குத்துவது எப்ப?*
*ஐயோ... ஐயோ... ஐயையோ*



**இயலான்**

நூல் அறிமுகத் தொடர்

# தீரனியன் திருவிளையாடல்

**(ஓட்டிச உலகில் நானும் ... தன் வரலாறு – மைதிலி றெஜினோல்ட் –நூல் அறிமுகம்)**

*செண்பகன்*




**திருவிளையாடல் -13**

மைதிலி, றினோஷுடனும் கைக்குழந்தை அனோஷும் சேர்ந்து மனத்துணிவை உயிர்த்தெழச்செய்து விமானத்தில் ஊருக்குப் பயணமாயினர்.

றினோஷ் விமானச் சாளரம் வழியால் புதினம் பார்த்தான். சிறிது நேரம் அமைதியாக விளையாடினான். பின் தன் விளையாட்டை ஆரம்பித்தான். விமானத்தில் அங்குமிங்கும் நடந்து திரிய ஆரம்பித்துவிட்டான். பதினொரு மணிநேர விமானப்பயணத்தில் படாதபாடு பட்டுவிட்டார் மைதிலி.

ஊருக்குச் சென்றதும், சனங்கள் சிலர், றினோஷின் நடத்தைகள், வாயால் வெளிவிடும் சத்தங்களைக் கண்டு "மனித குலமற்ற வேறொரு பிறவி போன்று விசித்திரமானவனாய் பார்த்தார்கள்"(பக்கம்–300).

"உண்மையிலேயே"அவர்கள் இப்படியான தற்சிந்தனையாளார்கள் யாரையும் ஏற்கனவே ஊர்களில் பார்த்ததில்லைதான்"(பக்கம்–301).

மைதிலி ஊரவர்களுக்குத் தன்பிள்ளை றினோஷை அறிமுகப்படுத்தி தெளிவுபடுத்தினாள். அவர் என்ர முதல் பிள்ளை. பெயர் றினோஷ். அவருக்கு ஓட்டிசம் எண்ட ஒரு வருத்தம் கொஞ்சம் இருக்கு. அதால இன்னும் அவர் கதைக்கத் தொடங்கேல்லை.கதைக்க தொடங்கினாப் பிறகு வருத்தம் குறைஞ்சிடும். அதோட இப்படிக் குளப்படியும் செய்யமாட்டார்(பக்கம்–301).

வீட்டில் ஒருநாள், "திடீரெனச் சமையலறை நெருப்புக் கொள்ளியை எடுத்துக்கொண்டோடி சின்ன அறையிலுள்ள உடுப்புகளில் பற்றவைத்துவிட்டார்."

பிறிதொருநாள் சாமி அறையினுள் இருந்த தீப்பெட்டியைக் கொண்டு பெரிய அலுமாரியினுள் இருந்த வீட்டுப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் போன்ற முக்கிய ஆவணங்கள் உட்பட பலவற்றை எரித்துப் பொசுக்கிவிட்டார். அவற்றில் வேறொருவருடைய அடையாள அட்டையும் சேர்ந்து பொசுங்கி விட்டது (பக்கம்– 302).

"அங்கு தீப்பெட்டிகள் இலகுவாக கிடைப்பது அவருக்கு மேலும் சாதகமாகி விட்டது. எங்கு ஒழித்து வைத்தாலும் மணந்து பிடித்து விடுவார். அவருக்கு எங்கிருந்தோ கிடைத்துவிடும். விரும்பியதைச் சாதித்துவிடுவார்"(பக்கம் –303) என்று மைதிலி ஊருக்கு வந்தும் நிம்மதியின்றித் தவித்தார்.

வீட்டிற்கு வருவோர் போவோர் றினோஷை ஆஸ்பத்திரியில் காட்டேல்லையே என்று விசாரிப்பவர்களிடம் மைதிலி " ஓம் அங்கையும் காட்டின்னாங்கள்.இந்தியாவிலையும் காட்டின்னாங்கள்.பயிற்சிகள் குடுக்கக் குடுக்க கொஞ்சம் கொஞ்சமாச் சரி வருமாம்"(பக்கம்–304).

"இப்படி ஒரே வசனத்தையே வருகின்ற ஒவ்வொருத்தவருக்கும் எத்தனை முறைகள் சொல்லிக்கொண்டிருப்பது?..."

"ஏன்டா இஞ்ச வந்தன் என அழத்தொடங்கிவிட்டேன். வாடிய மரத்திற்கு தண்ணீர் விட்டது போன்று அம்மா அப்பா என்னை ஆறுதல் படுத்தினார்கள்."(பக்கம்–305)

மைதிலியின் தவிப்பு கடவுளின் பிள்ளை றினோஷிற்கும் அக்கினி பகவானுக்கும் எங்கே புரியப் போகிறது. பூனைகளுக்கு விளையாட்டு. மைதிலிக்குச் சீவன் போகுது!

**திருவிளையாடல் -14**

அன்று மைதிலியின் ஊரையே ஒன்றிணைக்கும் அம்மன் கோயிலின் குஞ்சுகளாகிய அவ்வூர் அடியார்கள் அம்மனின் கொடியேற்றத் திருவிழாவில் குழுமியிருந்தனர்.

மைதிலியின் மனம் இவ்வாறு தன்னுள் பேசிக் கொண்டது. "இந்த ஆண்டு அம்மாள் என்னையும் அழைத்திருக்கிறாள் அருள் புரிவதற்காக என புளகாங்கிதம் அடைந்தேன்."

"றினோஷின் மனதிலும் அமைதி நிலவியதென, எனதருகில் அமைதியாக அமர்ந்து இருந்ததிலிருந்து விளங்கிக் கொண்டேன். அப்படி நிதானமாக இருந்து அனைத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டதை அதுவரைக்கும் நான் காணவில்லை. மனம் இலேசாக இருந்தது." (பக்கம் –307)

"அம்மாளின் அருள் வேண்ட ஒரு வினாடி கண்மூடிவிட்டேன்.அந் நேரத்தில் றினோஷ் எழும்பி

வசந்த மண்டபத்தை நோக்கி ஓட்டம் பிடித்தான். சேலையை உடுத்தி இருக்கிறேன் என்ற சிந்தனை கூட இல்லாமல் பின்னால் ஓட்டம் பிடித்தேன். றினோஷ் ஓடிய வேகத்தில் சாமிக்குப் படைக்கப்பட்ட அரிச்சனைத் தட்டிலிருந்த மாம்பழத்தை எடுத்து அதிலேயே நின்று சாப்பிடத்தொடங்கினார்."(பக்கம் –308)

அண்ணன் பிள்ளையாரிடம் தாய் தந்தை கொடுத்த மாம்பழத்துக்காக சண்டை பிடித்து ஆண்டியாக பழனி மலையேறியவர் முருகன். அந்த ஞாபகம் றினோஷுக்கு வந்ததோ என்னவோ? கடவுளின் குழந்தைக்கு கோயில் அவர் குடியிருக்கும் வீடுதானே!

**திருவிளையாடல் - 15**

ஒரு நாள் றினோஷை வீட்டில் காணவில்லை. நாம் ஆளுக்கொருத்தர் ஒவ்வொரு திசையிலும் தேடுதல் வேட்டையில் இறங்கிவிட்டோம். அதிஸ்டவசமாக தூரப்போய் விடாமல் வீட்டின் மேலே சுற்றவர இருந்த சீமெந்துத் தட்டில் குனிந்தபடி வீடு வலம் செய்து கொண்டிருந்தார்."(பக்கம் –309)

கடவுளின் பிள்ளைக்கு வீதிவலம் வர வசதியில்லையெனில் வீடுவலம் வருவது தவிர்க்கவியலாததுதானே!

**திருவிளையாடல் -16**

"அடுத்த சில நாட்களில் கிணற்றடியிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் குழந்தைகள் இருவரையும் இறக்கிக் குளிக்க விட்டேன். இருவருக்கும் ஆனந்தக்கொண்டாட்டமாக இருந்தது. நல்ல வெப்பத்தில் தண்ணீர்த்தொட்டியில் நீச்சல் விளையாட்டு."

அனோஷிடமிருந்து சடுதியாக வந்த சத்தம் திடுக்கிட வைத்தது. "அம்மா அண்ணாவை இஞ்ச காணேல்ல. வீடு வளவு முழுவதும் தேடித் தேடிக் களைத்துவிட்டேன். ஆள் கிடைக்கவில்லை. இனி முன்வீடு பின்வீடுகளில்தான் போய்க் கேட்கவேண்டும்.

"சசிகலாக்கா உங்க றினோஷ் வந்தவரே"

'இல்ல.ஏன் எங்க போனவர்'

'காணேல்ல' என்று சொன்னபடியே பக்கத்து வீட்டு யோகம் அன்ரியிடம் ஓடினேன்.

'யோகமன்ரீ றினோஷ் வந்தவரே,வீட்டில குளிச்சு கொண்டிருந்தவர்.இப்ப காணேல்ல.

'இல்லை மைதிலி வரேல்ல'

...நெஞ்சுத் தண்ணீர் வற்றும்வரை 'றினோஷ், றினோஷ்' என்று கத்தி கூச்சலிட்டேன்.

"சிறிது நேரத்தின் பின் கடைக்காரத் தில்லைமாமா எங்கள் வீட்டிற்கு அழைப்பை எடுத்து அப்பாவிடம் கூறினார்.

"உங்கட பேரன் என்ர கடையில நிக்கிறான். உடம்பெல்லாம் தண்ணியாக்கிடந்தது. குளிச்சபடி அப்படியே வந்திருக்கிறார் போல, திடுதிப்பென உள்ளுக்கு ஓடிவந்து, தன்ரபாட்டில கொக்கக் கோலாவ எடுத்துக்குடிச்சுக் கொண்டு நிக்கிறார். வந்து கூட்டிக்கொண்டு போங்கோ." (பக்கம்–(311)

"உந்தப்பிள்ளை கொக்ககோலாவுக்காகவா ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு ஓடிப்போயிருக்கு. என்னண்டு நீ அங்க வைச்சுச் சமாளிக்கிறாய்" என்றார் அப்பா.

'கொக்கக்கோலா, குளிர்கழி, கேக் போன்ற இனிப்புகளுக்காகத்தானே வெளியே ஓடுகிறார். அத வீட்டிலேயே வாங்கி வைத்து, கொஞ்சம் கொஞ்சமாக கொடுப்போம்" என்றார் அப்பா.

'ஒரு மணிநேரத்தின்பின் அப்பா ஒன்றரைப்போத்தல் கோலா, ஒருபெட்டி குளிர்கழி, கொஞ்சச் சொக்கிளேற், கேக் ஆகியவற்றுடன் வந்தார்.'

'அந்தப் போத்தலை அரைமணி நேரத்தில் குடித்து முடித்துவிட்டார். அவ்வாறு குளிர்கழியையும் குறித்த நேரத்திற்குள்ளேயே அனைத்தும் காலிபடுத்திவிட்டார்.'

இனி என்ன செய்யிறது (பக்கம்–313) அலுத்துக்கொண்டார் மைதிலி.

கடவுளுக்கு ஒரு வீட்டு படையல் போதுமா? ஊர் முழுக்க ஒன்று திரண்டு மடை வைப்பதில்லையா? கடவுள் ஊர்வலமாக வேட்டைக்கு செல்வதில்லையா? இனி என்ன செய்யிறது! □





*குழந்தைகளுக்காக வெளிவந்த அறிந்திரன் மீண்டும் வெளிவந்துள்ளது காலத்தின் தேவையாக உள்ளது. குழந்தைகளின் தேடல்களுக்கு அமைவாக சிறப்பான வடிவமைப்புடன் காத்திரமான அம்சங்களுடன் மிளிரும் அறிந்திரன் குழந்தைகளின் ஆக்கத்திறன்களை ஊக்குவிக்கும் வகையில் தொடர்ந்தும் வெளிவருவது வரவேற்கத்தக்கது.*
*ஆசிரியர் :அறிவன் அண்ணா*
*முகவரி : அறிந்திரன், கணபதி சர்வானந்தா இணுவில்*

# அனைவரும் அறிந்திருக்க வேண்டிய

# சிறுவர் சட்டங்கள்

**சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை 115 ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் 30.10.2025 இராமலிங்கம் கார்த்திகேசு நினைவுப்பேருரை**

**தர்ஷிகா முருகராசா**
சட்டத்தரணி

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலையின் 115 ஆவது நிறுவுநர் நினைவுரையை ஆற்றும் வாய்ப்பை வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர், விருந்தினர்கள் அனைவருக்கும் முதற்கண் மனநிறைவான எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாளைய உலகினை ஆளப்போகும் இன்றைய சிறுவர்களுக்கு தங்களுக்குரித்தான சில சட்டங்கள் பற்றியதொரு சிறு விளக்கமொன்றை வழங்குவதற்காக இந்நினைவுப் பேருரை அமைகின்றது.

சர்வதேச ரீதியில் சிறுவர் உரிமைகள் தொடர்பில் வடிவமைக்கப்பட்டுள்ள முக்கிய சட்ட ஆவணமாக ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயம் காணப்படுகின்றது. குறித்த ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் உறுப்புரை 01 இன் பிரகாரம் 18 வயதுக்கு குறைந்தவர்கள் யாவருமே சிறுவர்கள் என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளார்கள். எமது நாடும் குறித்த சிறுவர் உரிமைகள் பட்டயத்தினை ஏற்று அங்கீகரித்துள்ள ஒரு நாடாகையால், எமது நாடு சிறுவர்கள் தொடர்பில் குறித்த வரைவிலக்கணத்தினையே உள்வாங்கியுள்ளது. ஆகவே இலங்கையில் 18 வயதுக்கு குறைந்தவர்கள் யாவருமே சிறுவர்கள்.

இயற்கை நியதிகளின்படி மனிதனொருவன் இப்பூவுலகில் பிறக்கையிலே அவன் உரிமைகளுடனேயே பிறக்கின்றான். எனினும் குறித்த உரிமைகளை அவனால் தனித்தும், சுதந்திர மாகவும், சுயாதீனமாகவும் அனுபவிக்க முடியாமலிருப்பதன் காரணத்தினாலேயே சட்டத்தின் துணையை அவன் நாட வேண்டியிருக்கின்றது. அந்த வகையில் இப்பூமியில் தடம் பதிக்கும் ஒவ்வொரு சிறுவர்களும் தனித்தும், சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் செயற்படுவதற்காகவும், எந்தவிதமான அடக்குமுறைகளுக்கோ/ அதிகாரத் துஷ்பிரயோகங்களுக்கோ உட்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவும் பல்வேறுபட்ட சட்ட விதிமுறைகள் நாடளாவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அச்சட்ட விதிமுறைகளால் தொகுத்து வழங்கப்பட்டவற்றையே நாங்கள் சிறுவர் உரிமைகள் என்று கொண்டாடுகிறோம்.


யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்
115 – ஆவது நிறுவுநர் தினமும்
பரிசளிப்பு விழாவும் - 2025

அமரர் இராமலிங்கம் கார்த்திகேசு
(செட்டியார் - தம்பையா வாத்தியார் - சட்டம்பியார்)

நினைவுப் பேருரை

நாள் : 30.10.2025 வியாழன் 1.05 மணி
இடம்: வித்துவான் மு.விருத்தாசலம் மண்டபம்
தலைமை:
திரு.M.C.சுதாகரன்
(வித்தியாலய முதல்வர்)

பேருரைப் பொருள்
சிறுவர் சட்டங்கள்

செல்வி தர்ஷிகா முருகராசா LLB (Hons)
(ஆறுமுக விழுது, சட்டத்தரணி)

சிறுவர் உரிமைகள் என்ற எண்ணக் கருவானது பலதரப்பட்ட விடயங்களை உள்வாங்கியதொரு பரந்துபட்ட எண்ணக் கருவாகும். அந்த வகையில் அனைத்துச் சிறுவர்களுக்குமே இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கான உரிமை, சிறுவனாகக் கருதப்படுவதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை, கல்விக்கான உரிமை, துஷ்பிர யோகங்களிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, பேசுவதற்கான உரிமை, தமது கருத்துக்களை முன்வைப்பதற்கான உரிமை, மதச்சுதந்திரம் என ஒரு சாதாரண மனிதனால் அனுபவிக்கக்கூடிய அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதற்கு உரித்து டையவர்களாவார். அவற்றில் இன்றைய



சமூகம் அறிந்திருக்க வேண்டிய ஒரு சில முக்கிய உரிமைகளைப் பற்றி சட்டம் எவ்வாறு ஏற்பாடு செய்துள்ளது என்பதனை இந் நினைவுப் பேருரையில் ஆராய்வோம்.

ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயமானது 54 உறுப்புரைகளில் சிறுவர்ளுக்கேயுரித்தான பிரத்தியேக உரிமைகள் பற்றி ஏற்பாடு செய்துள்ளது. குறிப்பாக ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் உறுப்புரை 2 இன் பிரகாரம் எந்தவொரு சிறுவருக்கும் பாரபட்சத்திற்கு உட்படுத்தப்படாதிருக்கும் உரிமை மிக முக்கியமாக காணப்படுகின்றது. அதாவது எந்தவொரு சிறுவனும் தனது இனம், மதம், பால், சாதி, நிறம், சமூக, பொருளாதார அந்தஸ்து என எவற்றின் அடிப்படையிலும் பாரபட்சத்திற்கு உட்படுத்தப்படலாகாது. ஆகவே அனைத்து அரசுகளும் சிறுவர்கள் யாவரும் பாரபட்சமின்றி வாழ்வதற்குரிய வழிவகைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் குறித்த பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த விடயம் இலங்கையின் மீயுயர் சட்டமான அரசியலமைப்பிலும் உறுப்புரை 12 இல் "சட்டத்தின் முன்யாவரும் சமம்" என்பதாக உள்வாங்கப்பட்டுள்ளது. மேலும் எமது அரசியலமைப்பின் உறுப்புரை 12 (4) இன் பிரகாரம் பெண்கள், விஷேட தேவையுடையோர் மற்றும் சிறுவர்களின் நலன் பேணும் வகையிலான செயற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு இடமளிக்கப் பட்டுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் உறுப்புரை 3 இன் பிரகாரம் நீதி நிர்வாகத்தின் போது சிறுவர்களின் சிறந்த நலனையே சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் எந்தவொரு செயற்பாட்டை முன்னெடுப்பினும் அவை யாவும் சிறுவர்களின் அதியுச்ச நலனைக் கருத்திற் கொண்டே அமைய வேண்டும்.

அடுத்து சிறுவர்களுக்குரிய கல்வி கற்பதற்கான உரிமை பற்றி ஆராயுமிடத்து, "*Education is the most powerful weapon which you can use to change the world*" என்று நெல்சன் மண்டேலோ கூறியதற்கமைய, இந்த உலகை மாற்றக்கூடிய பெரும் சக்தியான கல்வியைப் பயில்வதற்கு அனைத்து சிறுவர்களுக்கும் சமத்துவமான உரிமை உண்டு. கல்வி இலவசமானதாகவும், அனைவருக்கும் சமத்துவமானதாகவும், கட்டாயமானதாகவும் இருத்தல் வேண்டுமென்பதாகவே ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் உறுப்புரை 28 மற்றும் 29 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனினும் எமது நாட்டின் மீயுயர் சட்டமான

அரசியலமைப்பில் கல்விக்கான உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக வகைப்படுத்தாத போதும், அரசியலமைப்பு உறுப்புரை 27(2) (ஏ) இன் கீழ் எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாதொழித்தலும் எல்லா நிலைகளிலும் உலகளாவியதும், சமத்துவானதுமான கல்வி வாய்ப்புக்கான உரிமையை எல்லாப் பிரசைகளுக்கும் உறுதிப்படுத்தலும் வேண்டும் என்பதை ஒரு வழிகாட்டிக் கோட்பாடாக உள்வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இலங்கையில் கல்வி தொடர்பான ஏற்பாடுகளை உள்வாங்கியதொரு பிரதான சட்ட ஆவணமாக 1939ம் ஆண்டின் 31ம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் காணப்படுகின்றது. இச்சட்டத்தினூடாகவே கல்வி தொடர்பான விதிமுறைகளையும்,ஒழுங்குவிதிகளையும் காலத்திற்கு காலம் உருவாக்கவும், மாற்றியமைப்பதற்கும் கல்வி அமைச்சுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் 2016.04.20ம் திகதிய 1963/30ம் இலக்க வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட *Compulsory Attendance of Children at Schools Regulations No 1 of 2015* இனூடாக 5–16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அனைவரும் பாடசாலையில் தமது கட்டாயக்கல்வியைப் பெறவேண்டியவர்கள் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இலங்கையில் 5–16வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர மறுப்பார்களாயின் சட்டத்தின் பார்வையில் அவர்கள்மீதுதகுந்தநடவடிக்கைஎடுக்கப்படும்.

இலங்கையின் சில முக்கிய வழக்குத் தீர்ப்புக்களை ஆராயுமிடத்து:

*De Soysa & Others V Secretary of Education & Others* வழக்கில் சிறுவனொருவருக்கு எயிட்ஸ் நோய் இருப்பதாகப் பரப்பப்பட்ட வதந்தியின் காரணமாகப் பாடசாலையில் குறித்த சிறுவன் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலுமே கூட, அவனது கல்விக்கான உரிமை, பாரபட்சத்திற்கு உட்படுத்தப்படாதிருக்கும் உரிமை என்பன மீறும் வகையில் குறித்த பாடசாலை செயற்பட முடியாதெனத் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*Q R Haputhantrige & Othes Vs Secretary, Ministry of education & Others* (2007) வழக்கில் சிறுவர்களை தரம் 01 இற்கு சேர்ப்பிப்பது தொடர்பில் பாடசாலையொன்று தன்னிச்சையாக சிறுவர் உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டு வருவதானது, சிறுவர்களின் கல்விக்கான உரிமையைப் பாதிப்பதாகத் தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே சிறுவர்களுக்கான உரிமைகள் மீறப்படுமிடத்து நீதிமன்றங்கள் கணிசமான பங்காற்றி அவ்வுரிமைகளை மீள நிலைநாட்டுகின்றன.

அடுத்துச் சிறுவர்கள் தொடர்பில் இன்றைய சமூகத்தின் பிரதான பேசுபொருளாகவுள்ள சிறுவர் ஊழியம் தொடர்பில் ஆராயுமிடத்து, சர்வதேச ரீதியில் தொழில் நியமங்கள், தராதரங்கள் தொடர்பில் *International Labour Organization* ஏற்பாடு செய்துள்ளது. குறித்த *International Labour Organization* ஆனது சிறுவர்களை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தல், சிறுவர்களின் கல்வி பாதிப்படையும் வகையில் தொழிலில் ஈடுபடுத்தல் முதலிய விடயங்களைத் தடுக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பில் இலங்கையில் *Emploment of Women, Young Persons and Chidren Act No 47 of 1956* காணப்படுகின்றது. குறித்த சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் இலங்கையிலும் சிறுவர் ஊழியம் தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அதன்பிரகாரம் *Minimum age Convention 1973* ஆனது பிள்ளைகள் கட்டாயக்கல்வியைத் தொடர வேண்டிய வயது வரை எந்தவொரு தொழிலிலும் பணியமர்த்தப்படலாகாது என ஏற்பாடு செய்துள்ளது. ஆகவே16 வயதிற்கு குறைவான சிறுவனொருவனை வேலையில் ஈடுபடுத்தும் ஒருவர் குற்றப்பணம் செலுத்துவதற்கு அல்லது சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கு அல்லது இரண்டிற்கும் ஆளாவார். எனினும் இலங்கையில் 14–18 வயது வரையான சிறுவர்கள் தமது கல்வியைப் பாதிக்காத வகையில் சிறு தொழில்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர் ஊழியம் தொடர்பிலான பிறிதொரு சட்ட ஏற்பாடாக *Worst forms of child labour convention 1999* காணப்படுகின்றது. இச்சட்டத்தில் சிறுவர்களை அடிமைத்தொழில், விபச்சாரம் முதலிய தீங்கான தொழில்களில் ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், சிறுவர்கள் இன்றைய சமூகத்தில் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான சட்ட ஏற்பாடுகளையும் அறிந்திருக்க



வேண்டியது அவசியமானதாகும். துஷ்பிரயோகம் என்பது வெறுமனே பாலியல் ரீதியானதாக மட்டுமன்றி உடல், உள, உணர்வு மற்றும் வார்த்தை ரீதியானதாகக் கூட அமையலாம். அந்த வகையில் 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட தண்டனைச் சட்டக்கோவையின் (திருத்தச் சட்டம்) பிரிவுகள் 286 A, 288, 288A, 288B இன் பிரகாரம் சிறுவர்களை குரூரமான முறையில் வதை இம்சைகளுக்கு உட்படுத்தல், சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் தொடர்பான பிரயோசனம் அடைதல், பாலியல் துஸ்பிரயோகங்களுக்காக சிறுவர்களை வழங்குதல், ஒழுக்கமற்ற காட்சிகளுக்கு அல்லது வெளியீடுகளை தன்வசம் வைத்திருத்தல், விற்பனை செய்தல், அதற்கு உடந்தையாக இருத்தல் போன்றவை யாவும் சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இல்லத்து வன்முறைகளைத் தவிர்க்கும் சட்டமானது, இல்லத்து வன்செயல்களால் துன்பத்திற்குள்ளாகும் எவரொருவருக்கும் உதவியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இல்லங்களில் நிகழும் வன்முறைகளால் சிறுவர்கள் பாதிப்படைவராயின் இச்சட்டப்பிரிவின் கீழ் தமக்கான நிவாரணத்தைத் தேடிக்கொள்ள முடியும்.

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டமானது, சிறுவர் பாதுகாப்பு, ஆலோசனை வழங்குதல், சட்ட உதவியைப் பெற்றுக்கொடுத்தல், விழிப்புணர்வூட்டல் போன்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டும் வருகின்றது. இச் சட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்புக்கு குழுக்கள் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தவிர்த்தல், துஷ்பிரயோகத்திற்காளான சிறுவர்களைப்பாதுகாத்தல், நிவாரணம் வழங்கல், துஷ்பிரயோகங்களிலிருந்து தப்புவதற்காக சிறுவர்களின் உரிமைகள் பற்றியும், துஷ்பிர யோகங்களை இல்லாதொழிக்கும் முறைகள் பற்றி விழிப்புணர்வூட்டல், குற்றவியல் விசாரணை/ குற்றவியல் வழக்குகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர் பான துறைப்பாடுகளை ஏற்று அவற்றை உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதல் முதலிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து சிறுவர் நலன் பேண் சட்டங்களின் வரிசையில் திருமணம்சார் சட்டங்களையும் நாம் ஆராய வேண்டியிருக்கின்றது. 1978ம் ஆண்டின் 23ம் இலக்க திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15 இன் பிரகாரம் நபரொருவர் திருமணம் புரிவதற்கான ஆகக்குறைந்த வயது 18 ஆகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே 18 வயதுக்கு குறைந்த நபரொருவரின் திருமணம் சட்டவிரோதமானதும், செல்லுபடியற்றதுமான திருமணமாகவே கருதப்படும். ஆகையால் எந்தவொரு சிறுவர்களையும் அவர்கள் தம் சிறுவர் பராயத்தை பூர்த்தி செய்வதற்கு முன்பாக யாரும் திருமணம் எனும் பந்தத்தை நோக்கி நகர்த்துவது முற்றிலும் பிழையான செயலாகும்.

மேலும், *The Children and Young Persons Ordinance No 48 of 1939* ஆனது சிறுவர்களுக்கான பிரத்தியேக சிறுவர் நீதிமன்றங்களின் வருகைக்கு வித்திட்டது. தவறிழைத்த சிறுவர்களுக்கு விஷேட அன்பும், அக்கறையும் தேவைப்படுவதால் அவர்களைக் கையாள்வதற்கென இந் நீதிமன்றஙள் விஷேடமாக இயங்கி வருகின்றன. இச் சட்டத்தின் அடிப்படையில் 14 வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவர்கள் எனவும், 14–16 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இளம்பிள்ளைகள் (*Young Persons*) என்பதாகவுமே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே குறித்த 16 வயதுக்குட்பட்டவர்கள் தவறிழைக்கையில் அவர்களுக்கான சட்ட நடவடிக்கைகள் சட்டத்தை மையப்படுத்தியதாகவன்றி, குறித்த சிறுவர்களின் நலனை மையப்படுத்தியதாகவே அமைய வேண்டும் என்ற கருப்பொருளில் இந் நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

எனவே இலங்கை மற்றும் சர்வதேசதராதரங்களின் பார்வையில் சிறுவர்களுக்குரிய சட்டங்கள் மற்றும் நீதிமன்றங்கள் உருவாக்கப் பட்டு, சிறுவர்களின் உரிமைகள் முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும் குறித்த உரிமைகளை சிறுவர்களால் பூரணமாக அனுபவிக்க முடிகின்றதா என்ற கேள்வி எழுப்புகையில்



அதற்கு நிச்சயமாக எம்மால் ஆம் என்று ஆணித்தரமாக பதிலளிக்க இயலாது. ஏனெனில் இன்றைய உலகில் சிறுவர் உரிமைகள் மீறும் வகையிலான துஷ்பிரயோகங்கள், அடக்குமுறைகள் என்பன குவிந்து கிடக் கின்றன. ஆகவே மேற்கூறப்பட்டுள்ள உரிமைகளை நாம் அறிந்திருப்பதன் மூலம் ஓரளவேனும் சிறுவர்கள் தமது உரிமைகள் எவையென்பதையும், அவ்வுரிமைகள் எச்சந் தர்ப்பத்தில் மீறப்படுகின்றன என்பதையும் அறிந்து கொள்ள இவ்வுரை உதவி புரியுமென நம்புகின்றேன்.

# நூல் முகம்




2025 ஐப்பசி நூலக மாதத்தை முன்னிட்டு ஜீவநதி 31 நாளும் நூல்களை வெளியீடு செய்கிறது. 2025.10.22 ஜீவநதியின் 480 ஆவது வெளியீடாக மு.அநாதரட்சகனின் 'படைப்பியல் நோக்கில் பார்வையும் விமர்சனமும்'

விலை 600 .00

40 ஆண்டுகளுக்கு மேலாக விமர்சன துறையில் ஈடு பட்டுவருபவர் அநாதரட்சகன் அவர்கள். மிக நேர்த்தியான விமர்சகராக விளங்குபவர். 5 நாவல்கள், 13 சிறுகதை தொகுதிகள் பற்றிய விமர்சன கட்டுரைகள் அடங்கிய விமர்சன நூல்.

1. booklab – திருநெல்வேலி
2. எங்கட புத்தகங்கள் – அம்மன் வீதி யாழ்ப்பாணம்
3. பரணீ புத்தக கூடம் – நெல்லியடியில் பெற்று கொள்ளலாம்.

தபாலில் பெறுவதாயின் 0775991949 (whattsap) இல் தொடர்பு கொள்ளுங்கள்

மூத்தோர்
படையல்
சிறுகதை

# தண்ணீரும் கண்ணீரும்



டொமினிக் ஜீவா



**யா**ழ்ப்பாணப் பட்டினத்துக் கடற்கரையோரப் பகுதிகளில் ஒரு நாளாவது குடியிருந்தவர்களுக்குத் தான் அதன் அருமை சட்டென்று தெரியும்; அதன் அருமை நன்றாகப் புரியும். மருந்துக்குக்கூட நல்ல தண்ணீர் குடிப்பதற்குக் கிடைக்காமல் அந்தச் சுற்றுப்பகுதியில் உள்ளவர்கள்– சாதாரண மக்கள்– படும்பாடைப் பார்க்கும் பொழுது நமக்கே நாவரட்சி ஏறபட்டு விடுகின்றதென்றால், அந்தத் தண்ணீர்ப் பிரச்சினையின் பூதாகாரமான உருவை நீங்கள் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

பட்டினத்துக் கடற்கரைப்பகுதி அது; 'குருநகர்' என்ற திருநாமம் தரித்துத் திகழ்கின்றது. அந்த வட்டாரத்தின் ஒரு பகுதியிற்றான் கடந்த பத்துப் பதினைந்து வருடகாலமாக வாழ்ந்து வருகிறான் பண்டாரி. அவன் ஒரு ரிக்ஷாக்காரன்.

– அதாவது, இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள் மனிதமாடு என்று மாற்றுப் பெயரிட்டு எழுதிவரும், மனிதனை மனிதன் இழுத்து வாழும் தொழிலைச் செய்பவன். ஆயினும் சந்தேகப் படத் தேவையில்லை. அவன் மனிதனேதான்! பட்டினத்து நாகரீக வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக அவன் திகழ்ந்து வந்தான். ஓர் அம்சமாகிவிட்டான்.

பண்டாரி பரம்பரைக் குலவித்தையாக இந்த 'இழுக்கும்' தொழிலைச் செய்பவனல்ல. பரம்பரையாகக் குலத் தொழில் கள்ளிறக்குவது. இராஜகுமாரனை மணந்த செம்படவப் பெண், 'இறால் எப்படிச் சுருண்டிருக்கும்?' என்று கேட்டாளாம். அதைப்போன்று அவன் குலத்தொழிலை மறந்தவனல்ல. அல்லது காற்சட்டை அணிந்து, 'இங்கிலீஸ்' படிப்பின் துணையுடன் உத்தியோகம் பார்த்து அரிசிகாய்ச்சி மரத்தைப்பற்றிப் பேசக் கூடிய நாகரிகவானுமல்ல. சென்ற ஆண்டுவரை, காலில் 'தலைநார்' பூட்டி, மரம் உரஞ்சி, ஏறி இறங்கிக் கள் சேர்த்தவன்தான். ஆனால் பட்டினத்தில் இருக்கும் மது ஒழிப்பு மகாசபையின் பிரச்சாரப் பலமும், அதைத் தவறாகப் புரிந்துகொண்ட சில தீவிரவாதிகளின் திடீர் நடவடிக்கைகளும் ஒன்று சேர்ந்து கள்ளிறக்கும் தொழிலாளரின் பிழைப்பில் மண்ணைப்போட்டுவிட்டன; பண்டாரியின் வயிறிலும் சேர்த்து மண்ணைத் தூவிவிட்டன.

திடீரென்று ஒருநாள் அவனது கள்ளுக்கொட்டில் தீக்கிரையாக்கப்பட்டு எரிந்து சாம்பராகிவிட்டது. அந்த நாள் தொட்டுப் பண்டாரி தன் குடும்பத்தைக் காப்பாற்றும் நிமித்தம் பிச்சை எடுப்பவனாகவோ, 'பிக்பாக்கட்' காரனாகவோ, மூன்று சீட்டுத் திருப்பி 'முச்சந்தியில்' நடமாடும் சூதாட்டச் சாவடிக்காரனாகவோ மாறிவிடவில்லை.

அவன், நேர்மையான உழைப்பாளி; மனந்தளராத் தொழிலாளி. ஆகவே, அவன் மனிதனாகவே மனிதப் பண்புகளுடன் வாழத் தீர்மானித்தான். இப்பொழுது பட்டினத்து ரிக்ஷாக்காரனாக நடமாடுகிறான்.

இப்பொழுது, அந்தத் தொழில் – இழுக்கும் தொழில் – அவனுக்குப் பழக்கப்பட்ட தொழிலாக அமைந்துவிட்டது. "ஐயா... துரை... ராசா..." – இந்த வார்த்தைகளைக் கீறல் விழுந்த கிராமப்போன் ரிக்கார்டைப்போல ஒலித்துக்கொண்டே நடமாடுவான். அவன் இழுத்து வரும் ரிக்ஷா அவனுக்குச் சொந்தமானதல்ல. நாளொன்றுக்கு முக்கால் ரூபாயை வாடகைப் பணமாக, வண்டிச்

சொந்தக்காரியிடம்– அந்தப் பொக்குவாய்க் கிழவி செல்லத்திடம் – செலுத்தினால்தான் அந்த வண்டியை ஒரு நாளைக்குச் சொந்தம் கொண்டாட அவனால் முடியும்.

இப்படியான அவனுடைய வாழ்வு– மனைவியையும் ஒரு குழந்தையையும் கொண்ட அவன் குடும்பத்தின் வாழ்வு– ஏதோ ஒரு வழியாக ஓடிக்கொண்டிருந்தது. மண் ஒழுங்கையால் பாரத்துடன் ரிக்ஷா வண்டியை இழுத்துச் செல்வதைப்போல, வாழ்க்கையென்ற வண்டியைப் பண்டாரி மிகச் சிரமத்தின் பேரில்...

ஒரு நாள்–

இரவு பத்து மணி இருக்கும். காந்தீயவாதியும், ஜீவகாருண்ய சங்கத் தலைவருமான, பட்டினத்துப் பிரமுகரொருவரை– பென்னம் பெரிய மனிதரை– பிரச்சாரக்கூட்டம் முடிந்ததும் அவருடைய வீட்டுக்குக் கொண்டு சேர்த்துவிட்டு, அப்பொழுதுதான் வீடுவந்து சேர்ந்தான் பண்டாரி.

மதியத்தில் சாப்பிடாததால், வந்ததும் வராததுமாக அவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. சிறு குடலைப் பெருங்குடல் தின்பதுபோன்ற வேகம் மிக்க பசி. சாப்பாடு என்ற பெயரால் ஆக்கி வைத்திருந்த அமெரிக்கன் மாப்பிட்டையும், சுட்ட கருவாட்டுத் துண்டொன்றையும் 'அவக்'கென்று விழுங்கித் தீர்த்துவிட்டுத் தண்ணீர் குடத்தைச் சரித்துப் பார்த்தான்.

அதற்குள ஒரு துளி தண்ணீர்கூட இருக்கவில்லை.

அவனுக்குச் சினம் பொங்கியது. சாப்பிட்டபின் ஒரு சொட்டு நல்ல தண்ணீராவது வாய்க்குள் ஊற்றிக்கொள்ளாதுபோனால், பண்டாரிக்குப் 'பத்தியம்' ஏற்படாது; அன்று சாப்பிட்ட மாதிரியும் இருக்காது. நாக்குத் தாகத்தால் வரண்டது; தண்ணீர் 'விடா'யால் உலர்ந்தது.

குட்டிபோட்டநாயைப்போல கோபத்தினால் அவன் மனைவிமீது 'வள்'ளென்று சீறி விழுந்தான்.

"ஏய், இந்தாடீ! குடத்திலே ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. விடிய விடிய நீ என்னடி செய்து கிழித்தாய்?" – அவனுடைய குரல் கனத்தது. ஆத்திரம் கொப்பளித்தது.

மனைவி அவனுக்கு ஏற்ற ஜோடிதான். பதிலுக்கு 'மீன் கடை' இரைச்சலில், "அதுக்கு நான் என்னத்தைப் பண்ண? உன்ரை மோன்தான் ஒரு சதத்தை நட்டு வைச்சிட்டு 'காசுமரம் முளைக்கும்; அது காய்ச்சதும் காசு பிடுங்கலாம்' எண்டு புசத்திக்கொண்டு, நான் அள்ளி வைச்ச தண்ணியெல்லாத்தையும் அள்ளி அள்ளி ஊத்தினான். எல்லாம் நீ உன்ரை மோனுக்குக் குடுக்கிற செல்லம்" என பதிலிறுத்தாள்.

மக்கன்பால் பண்டாரிக்கிருக்கும் பாசம், அவன் கோபத்தினை ஓரளவு மட்டுப் படுத்தியது. ஒரு வாரத்திற்கு முன்பு கொடுத்த அந்த ஒரு சத நாணயத்தை, அவன் மண்ணில் புதைத்து வைத்துத் தினசரி, 'காசு மரம் முளைக்கும்; காசு மரம் முளைக்கும்' என அசாத்திய நம்பிக்கையில், உள்ள தண்ணீரையெல்லாம் ஊற்றித் தள்ளுவதை நினைத்தபொழுது அந்த நிலையிலும் அவனால் சிரிக்காமல் இருக்க முடியவில்ல. மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

அவன் வாய் முணுமுணுத்தது. "எடே, பொடியா! காசு மரத்திலை முளைக்கிறதில்லையடா! நல்லாப் பாடுபட்டுத்தான் காசை உழைக்க வேணும்..."

ஐந்து நிமிஷங்கள் மடிந்தன.

'ஈய'ச் செம்புடன் அடுத்த வீட்டுக்கு நல்ல தண்ணீர் 'கடன்' கேட்கச் சென்ற அவன் மனைவி வெறும் செம்புடன் திரும்பி வந்தாள், அயலில் வாழ்பவர்கள் எதக் கேட்டாலும் கொடுத்துவிடுவார்கள். ஒரு செம்பு நல்ல தண்ணீர் இரவல் கேட்டாலோ வந்தது வினை. தண்ணீரை வைத்துக் கொண்டே, "ஐயோ,,, தண்ணீரெல்லாம் முடிஞ்சு போச்சே!" என்று பல்லிப் பாஷையில் நச்சரித்துப் பதில் சொல்வார்கள்.

அவர்களுக்கல்லவா தண்ணீரின் அருமை தெரியும்? அதை எடுப்பதற்கு அவர்கள் பட்டபாடு இருக்கிறதே!

வெறுங்கையுடன் வந்த மனைவியைக் கண்டதும் அமெரிக்கன் மாப்பிட்டால் பொருமிய குடலில் தண்ணீர் வேட்கை இரட்டித்தது.

"நல்ல தண்ணி ஓரிடமும் இல்லையாம். இப்ப என்ன செய்யுறது? உப்புத் தண்ணியெண்டால் வேண்டித்தாறன். ஏதோ குடிச்சிட்டுப் படு. காலமை பாக்கலாம்."

'உப்புத் தண்ணீர் குடிக்கும் படி' மனையாள் அருளிய உபதேசம் அவன் பொறுமையைச் சோதித்தது. பண்டாரி இயற்கையில் வெகு பொறுமைசாலி. வீட்டு நிலைமையை உணர்ந்து ஒத்துப்போகக் கூடியவன். கள்ளுத்தொழிலாளியாக மாறிய இந்தக் காலம்வரை சோர்வுற உடலுக்குத் 'தென்பு கொடுக்க' என்ற சாட்டிலாவதுகூட மதுவை அவன் தொட்டுப் பார்த்தது கிடையாது. அப்படிப்பட்டவனுக்கு மனைவியின் வார்த்தைகள், இன்று ஏனோ தெரியாது, பழங்கள்ளின் வேகத்தில் வெறிகொள்ளச் செய்தது.

அவனுடைய குடியிருப்பில் கிணறு கிடையாது.

அக்கம் பக்கத்துக் குடிசைகளுக்கும் அந்தப் 'பாக்கியம்' இல்லை. அப்பகுதியில் வசிப்பவர்கள் அத்தனை பேரும் தொழிலாளர். கடல் தொழிலாளர், பஸ் தொழிலாளர், வண்டியிழுப்போர்– இப்படிப் பல ரகம். ஆனால் தொழிலாளர் என்ற ரீதியில் நகரத்தின் மிகப் பின்தங்கிய அந்தப் பகுதியில் சேரி அமைத்துக் குடியேறியிருந்தனர். ஆகவேதான், அரசாங்கமும், நகராண்மைக் கழகமும் அந்த 'லேபரேர்ஸ்' பகுதியை அலட்சியம் செய்துவிட்டிருந்தன.

மனிதனின் அன்றாடத் தேவையான குடி தண்ணீர் கூடக் கிடைக்க வசதியில்லையென்றால், அந்த வட்டாரத்தின் மகிமையை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

பண்டாரியின் குடிசையிலிருந்து, பத்துக் குடிசைகளுக்கப்பால், பஸ் தொழிலாளி சாமிநாதனின் 'வீடு' இருக்கிறது. அங்குதான் மிகக் கிட்டிய கிணறு உண்டு. பெயருக்குக் கிணறேயொழிய, அது நீர் நிரம்பியுள்ள குழியென்பதே பொருந்தும். அந்தக் கிணற்றுத் தண்ணீர்தான் அவசரத் தேவைக்குப் பயன்படும். அதுவும், பல மணி நேரம் காவலிருந்து வீட்டுக்காரர்களிலொருவர் அள்ளி ஊற்றி அருள் பாலித்தாற்றான் கண்ணால் காண முடியும். அல்லது, அற்றதுதான்!

அந்தக் கிணற்றில் ஊறும் தண்ணீரைத்தான் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் 'மருந்துத் தண்ணி'யாக ஊற்றி வருகிறார்களோ என்ற பெருஞ் சந்தேகம், வெகு நாட்களா பண்டாரியின் நெஞ்சத்தில் இருந்து வருகிறது. அந்தச் சந்தேகம் இன்று கூடத் தீர்ந்தபாடில்லை. அந்தத் தண்ணீர் அப்படிப்பட்ட உவர்ப்பு. குடிக்க முடியாத அளவுக்கு 'கைச்சல்'!

இந்தத் தண்ணீரைத்தான் குடிக்கும்படி அவன் மனைவி அவனுக்கு இதோபதேசம் செய்கிறாள். அவனுக்கு எப்படி இருக்கும்?

சற்றுத் தூரத்தில் மாத கோயிலொனு இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழ்பவர்களுக்கு அதுவே மிகவும் சிறந்த நல்ல தண்ணீர்க்கிணறு; வற்றாத அருள் சுரக்கும் மகாவலி கங்கை! வட மாகாண மக்களுக்குப் பயனின்றிக் கடலில் சங்கமமாகும் மகாவலி நதியைப் போலவே, அந்த நல்ல தண்ணீர்க் கிணறு இரவில் பயன்படாது. கோயில் நிர்வாகிகள் இரவில் அதன் படலையைப் பூட்டி விடுவார்கள்.

அதைத் தவிர, இன்னுமொரு நல்ல தண்ணீர்க் கிணறும் அப்பகுதியில் இருக்கிறது. அதுதான் அம்மன் கோயில் கிணறு. 'அம்மன் கோயில் கிணறு' என்ற விருதை அது பெற்றிருப்பினும், உண்மையில் அக் கிணறென்னவோ பொதுக் கிணறுதான். அம்மன் கோயிலுக்கு அணித்தாக உள்ளதால், நாளாவட்டத்தில் அப்பெயரினைச் சுவீகரித்துக் கொண்டது. அதில் குறிப்பிட்ட சில சாதியாரைத் தவிர வேறுயாரும் தண்ணீர் அள்ளக் கூடாது என்ற சட்டம் கல்வெட்டில் ஏறாமல் நிலைத்துவிட்டது. அக்கிணறு உபயோகக் குறைவினால், ஜாதி வெறியர்களின் நெஞ்சங்களைப் போலவே இருண்டு பாசி படர்ந்து கிடந்தது.

அப்பகுதி மக்களுக்கு இரண்டு கிணறும் தெய்வங்கள். ஒன்று பகலில் கடாட்சிக்கும் தெய்வம்; மற்றது ஒறுப்பாக, ஒரு சிலருக்கு மட்டம் அருள் சுரக்கும் தெய்வம். எது எவ்வாறு இருப்பினும் தெய்வம் தெய்வந்தானே?

இந்த இரண்டு கிணற்றுத் தண்ணீரும் கிடைக்க வழியில்லை யென்றால், பண்டாரி போன்றோர் அந்த ஆஸ்பத்திரி 'மருந்துத் தண்ணீரைத்தான் குடிக்க வேண்டும். ஆக, மனைவியின் உபதேசந்தான் சாத்திய விட்டத்திற்குட்பட்டது என்று அவனுக்குப் பட்டது.

"ஒரு நாளைக்குக் குடிச்சா என்ன கெட்டுப் போயிடும்? நல்ல தண்ணிக்குக் காலமை பாக்கலாம். சொல்லன். உப்புத் தண்ணி வேண்டி வரட்டா?"

அவன் பதில் சொல்லவில்லை. அவளுடைய கையிலிருந்து 'ஈய'ச் செம்பைப் பறித்தான். எங்கும் கவிந்திருந்த கோர இருளில் 'விறு விறு' என்று நடந்தான். அவளுக்கு ஆச்சரியம். அவன் சென்ற திக்கைப் பார்த்தபடியே, அசைவற்று, முனிசிப்பல் வெளிச்சக் கம்பமாக நின்றாள்.

பண்டாரி எவ்வளவோ சாமர்த்தியமாகத்தான் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளினான். ஆனால் ஓட்டை வாளி, சல சல வென்று நீரைக் கொட்டி, அவனுடைய திருட்டைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அவனுடைய நெஞ்சு படபடத்தது. பயம் அவனைக் கவ்வயது. புதிதாகத் திருடச் செல்பவன் தனது காலடியோசையைக் கேட்டே மிரளும் மனோபாவம் அவனைச் சுற்றி நின்றது. தேகம் பதறியது. கைகால்கள் உதறலெடுத்தன. அவனுடைய முதல்முயற்சி வெற்றி பெறவில்லை!

இரண்டாவது முறையும் முயற்சி செய்தான். அவனுடைய புலன் முழுவதும் தண்ணீரள்ளும் வாளியுடன் ஒன்றுபட்டிருந்தது. ஒரு தடவை வாளியை நன்றாகக் கோலிவிட்டான். வாளி ஒருதடவை தண்ணீர்ப் பரப்பிற்குள் மூழ்கி எழும்பி–

இடது பக்கத்திலிருந்து குரலொன்று கேட்டது.

"ஆரது கிணத்திலை? குடிக்கக் கொஞ்சம் தண்ணீ ஊத்துங்க..." – பஸ் கண்டக்டர் சாமிநாதனின் குரலிது.

பண்டாரி வெலவெலத்துப் போனான். முதல் முதலாகச சத்திர சிகிட்சை செய்து கொண்டிருக்கும் இளம் டாக்டரின் முகத்தில் சுரப்பதைப் போன்று, பண்டாரியின் முகத்தில் வியர்வைத் துளிகள் மலிந்தன. அம்மன் கோயில் சிலையைப் போன்று மௌனத்துடன் இணைந்து மௌனியாய் நின்றான். வாளி தண்ணீருக்குள் தாழ்ந்தபடி இருந்தது; அவன் கைகள் துலாக்கொடியைப் பிடித்தது. பிடித்தபடி இருந்தன; அவன் சிலையாக நிலைகொண்டு நின்றான்.

அதே குரல் மீண்டும் ஒலித்தது. சற்றுப் பலமான அதட்டல். "ஆரப்பா கிணத்திலை? காதுகேக்கல்லையா? கொஞ்சம் தண்ணி ஊத்துறதுக்கென்ன?"

மௌனம்.

'என்னமோ–ஏதோ' என்ற பயம்– பயங்கர நினைவெழுப்பும் பீதி– சாமிநாதனைத் தன்பால் ஈர்த்தது. அதற்குக் காரணமும் உண்டு.

இரவு நேரத்தில், அம்மன் கோயிலுக்கு அருகில் சங்கிலிமாடன் வீதிவலம் வந்து போவான் என்பது வழக்கழியாக் கதை. இந்தக் கதையைச் சாதாரண காலங்களில் சாமிநாதன் ஒப்புக்கொள்ள மாட்டான். ஏனெனில், அவனுடைய பஸ்ஸில் பிரயாணம் செய்திருக்கக்கூடிய நீங்கள் அவன் தன்னுடைய வாயினாலேயே தன் வீர, தீர, பராக்கிரமச் செயல்களையெல்லாம் விஸ்தரிக்கக் கேட்டிருப்பீர்கள்.

அசட்டுத் துணிச்சல் உந்த, சாமிநாதன், வேலியோரம் சாத்தப்பட்டிருந்த சைக்கிளடிக்குச் சென்று, சைக்கிள் விளக்குடன் திரும்பினான். அப்பொழுதும் பண்டாரி சிலையாக, துலாக் கொடியைப் பிடித்த வண்ணமே கிணற்றடியில் நின்றான். அவனுடைய முகத்துக்கு நேரே சாமிநாதன் வெளிச்சத்தைப் பிடித்தான். முகம் தெரிந்தது. சவக்களை தட்டியிருந்த அந்த முகம்...

துலாக் கொடியுடன் பண்டாரியைக் கண்ட சாமிநாதன் ஒரு கணம் திடுக்கிட்டான். 'நான் காண்பது கனவுதானோ?' என்ற ஐயம் அந்தக் கணம் அவனுடைய மனதை அலைக்கழித்தது. கண்களை மூடித்திறந்து, மறுபடியும் உற்றுப் பார்த்தான். சந்தேகமில்லை. அவனுக்கு முன்னால் பண்டாரியின் உருவந்தான் நின்று கொண்டிருந்தது...

'... நளவன்–நளப் பண்டாரி– அம்மன் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளிவிட்டான். கிணற்றைத் தீட்டுப் படுத்திவிட்டான். நளப்பயலின் துணிச்சல் என்ன? மேல் சாதிக்காரர்களின் வீரத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட சவால்; அவர்கள் முகத்தில் பூசப்பட்ட அவமானம்!... எவ்வளவு... எவ்வளவு...'

சாமிநாதனின் உள்ளங்காலிலிருந்து ஒரு கொதிப்பு வெடித்துக் கிளம்பி, அவன் உச்சந்தலையைத் தாக்கியது. மனிதன், அடுத்த கணமே மிருகமாக மாறிவிட்டான்.

"நளப்பயலே! அவ்வளவு கொழுப்பாடா உனக்கு? இவ்வளவு தூரத்துக்கு வந்திட்டியளாடா? எங்கடகிணத்திலே தண்ணி அள்ளுறதுக்கு உனக்கு எவ்வளவு முழ நெஞ்சடா? என்னடா நான் கேக்கிறன்; நீ பேசாமல் நிக்கிறாய்!"– கோபக்கொதிப்புடன் கேள்விப் பாணங்களை அள்ளியள்ளி வீசினான். குருஷேத்திரப் போரில், பார்த்தனின் கணைகள் பீஷ்மரின் உடலைப் பிய்த்தனவாம். அந்த அம்புகளிலும் பார்க்க உள்ளத்தைத் தைக்கும் சொல்லம்புகள் கூரியனவாகும். ஆனால் அச் சொல்லம்புகள் வலியற்றன. பண்டாரியின் மனம் புண்படவில்லை... அவன் இந்த உலகத்து உணர்ச்சியே அற்றவனாக...

சாமிநாதன்இரைந்து கத்தினான். கோபக் குரலில் கூப்பாடு போட்டான். அவனுடைய கோபப் பெருங்குரலைக் கேட்டு அயலில் வசிப்பவர்கள், வழிப் போக்கர்கள் ஆகிய அத்தனை பேர்களும் கூடிவிட்டனர்.

கேள்வி மேல் கேள்விகள், கூடியவர்கள் தங்களை மெத்தப் பெரிய வக்கீல்களாகக் கற்பித்துக்கொண்டு பண்டாரியைக் குறுக்குவிசாரணை செய்வதில் முனைந்தார்கள். அவன் வாயே திறக்கவில்லை.

முடிவு?

'தமிழ்ப் பண்பாட்'டினைக் காப்பாற்றும் திருத்தொண்டு.

பண்டாரிக்கு, எழும்பப் படுக்க முடியாமல் செம்மையாய் உதை விழுந்தது. முரட்டுப் போலீஸ்காரனிடம் வசமாக சிக்கிக் கொண்ட துடியான இளைஞனுக்குக் கிடைக்கும'வரிசை'யைப் போல மூட்டு மூட்டாக அடிக்கப்பட்டான். இத்துடன் அவர்களுடைய– உயர் –ஜாதிமான்களின்– பரம்பரையும், பெருமையும், மேன்மையும் இரவுக்கிரவே காப்பாற்றப்பட்டன. கிணற்றில் ஏற்பட்ட துடக்கு துடைக்கப்பட்டதென்ற நினைவு...

பண்டாரிக்கு நஷ்டம் பெரிதல்ல. கொண்டு சென்ற செம்பையாரோ புண்ணியவாளன் அபகரித்து விட்டான். சில காயங்கள். இரத்தம் சிந்தப்பட்டது. அவ்வளவுதான். உயிருக்கு ஆபத்தில்லை!

–பார்க்கப் போனால், இது பண்டாரியின் பூர்வ ஜன்மப்புண்ணிய பலனாக இருக்கலாம். அல்லது, அவனுடைய இல்லாளின் மாங்கல்ய பலனாகக்கூட இருக்கலாம். இந்த வெறிக்கூட்டம் இப்படியான சந்தர்ப்பத்தில், உயிருடன் விடுவதாயின், அது பத்திரிகைகளுக்கே அனுப்பத்தக்க செய்திகூட.

நோக்காட்டில் வெந்து, அன்றிரவு படுத்திருந்த பண்டாரி தன் குடிசை நள்ளிரவில் தீப்பற்றி எரிவதைக் கண்டான். மறுநாள் குடிசை இருந்த இடத்தில், வெறும் சாம்பல். ஜாதி அபிமானம் என்ற தீ அவனுடைய குடிசையை ஜீரணித்து ஏப்பமிட்டது. எந்தத் தோஷத்தையும் அக்கினி பகவான் எரித்து, அழித்து, சுத்திகரித்து விடுவாராம். அக்கினி பகவான் உயர்ஜாதி இந்துக்களின் தீப்பெட்டிக்குள்ளிருந்துதான் அடிக்கடி தலையைக் காட்டும் ஆசாமியாச்சே!

இந்தச் சம்பவங்கள் நடந்தேறி ஒரு மாதமாகி விட்டது.

ஒருநாள் மாலை, நல்லூர் மஞ்சத்தைப் போன்று ஆடி அசைந்து நடைபோட்டுக் கொண்டிருந்தான் பண்டாரி. அன்று அவனுக்கு வாடகை எதுவும் கிடைக்க வில்லை. இதுவும் அவனுக்குப் பழக்கம். ஒரு மாதத்திற்குள் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களில் மனதை மேயவிட்டுக் கொண்டு, நகரத்தில் பெரிய வீதிகளிலெல்லாம் 'வெறும்' ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே நடந்தான். காலையிலிருந்து வாடகைபிடிக்க அலைந்த களைப்பு வேறு.

பறங்கித் தெருவிலுள்ள கன்னியாஸ்திரி மடத்தைச் சமீபித்தான்; அங்கே, அலுப்பந்தி செல்லும் தண்டவாளமும், பெரிய தெருவும் கலவிச் சங்கமிக்கும் திருவிடத்திற்கு, வலது பக்கத்துக் கான் ஓரத்தில், ஜனத்திரள் குழுமியிருப்பது அவனைக் கவர்ந்தது. 'ஆளை ஆள் எகிறிக் கொண்டு பார்த்து ரஸிக்கும் அந்தக் காட்சிதான் என்ன?'

'படித்தவனுகுப் பின்னாலும் பத்துப் பேர்; பைத்தியக்காரனுக்குப் பின்னாலும்...' நகர மக்களின் மந்தை மனப்பான்மை என்ற எண்ணம் அவனை முதலில் ஜனத்திரளை அலட்சியம் பண்ணச் செய்தது. மறுகணம் மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள'புதினம்' பார்க்கும் மனோபாவம் அவனை முன்னேற விடவில்லை.

அதே நேரத்தில்,வீதியின் நேரெதிர் பக்கத்தி லிருந்து "ஏய்,ரிக்ஷா! கெதியா வா. படத்துக்குப் போகவேணும், வாறீயா?" என்று ஒரு குரல் அவசரப்படுத்தியது.

அவனது எண்ணம் சிறிது சலனப்பட்டது. இறுதியில் 'அங்கு என்னதான் நடக்கிறது' என்பதைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை வென்றது. "கொஞ்சம் பொறுங்க துரை. இதோ வந்துவிட்டேன்" என்று குரல் கொடுத்து விட்டு, ரிக்ஷாவை ஒரு பக்கமாக நிறுத்தினான். பின்னர், கூட்டத்தில் ஒருவனாகக் கலந்தான்.

அங்கே–

கண்டக்டர் சாமிநாதன் இரத்த வெள்ளத்தில் மல்லாந்து கிடந்தான். உடம்பின் பலபாகங்களிலும் காயங்கள். அந்தக் காயங்களிலிருந்து பாயும் இரத்தம். சூழலிலும் தொட்டம் தொட்டமாக இரத்தக் கறைள். விகாரமான காட்சி...

பண்டாரி விஷயத்தை ஒருவாறு ஊகித்தான். விசாரித்து அறிந்தான்.

ரெயிலும் பஸ்ஸும் ஓட்டப்பயந்தயம் நடத்தின. பந்தயத்தில் பஸ் தோற்றுவிட்டது. பஸ்ஸுக்கோ பிரயாணிகளுக்கோ அதிக சேதமெதுவும் கிடையாது. ஆனால் 'புட்போட்'டில் நின்ற கண்டக்டர் சாமிநாதனுக்குத்தான் பலமான அடி. அத்துடன் வெகு தூரத்திறகுத் தூக்கியெறியப்பட்டு,ஸ்மரணை இழந்தான். அந்த நிலையில் கிடந்தவனைச் சுற்றித்தான் அந்த ஜனத்திரள்.

பண்டாரியின் மனதில் ஆரம்பத்தில் ஒருவகை மகிழ்வுணர்ச்சி ஏற்பட்டது. அடிபட்ட அன்றிரவு அவன் மனைவி கொடுத்த சாபங்கள் மனதில் குதிர்ந்தன. "குறுக்கால தெறிப்பான்! நல்லாயிருப்பானா? அவன் குடும்பமும் சந்தானமும்' நல்லாயிருக்குமா? கொள்ளையில போவான்! எரிஞ்சு போவான்! கட்டையிலே போவான். நல்லூர் பெருமானே... அவனுக்கு ஒரு அழிவைக் காட்டு."

ஒரேயொரு கணம் அந்த அர்ச்சனைகளின் நினைவு அவன் மனதைக் குளிர்வித்தது. சவாரிக்கு அழைத்த 'துரை'யின் ஞாபகம் வந்தது. திரும்பலாம் என்ற எண்ணம் தளிர்த்தது– திரும்ப நினைத்தான்.

மறுகணம் அவனுடைய மனிதமனம் – அந்தத் தொழிலாளி இதயம் – தன்னில்தானே வெறுப்புக் கொண்டது. தன்னுடைய நினைவுக்காகத் தானே வெட்கப்பட்டான். மனதைச் சுதாகரித்துக் கொண்டான்.

கூடிநின்றவர்கள் சும்மா 'ஆகா... ஊகூ...' என்று சத்தம் போட்டுச் சந்தடி செய்தனரேயொழிய, ஒருவரும் முதலுதவியோ அல்லது வேறு உதவியோ செய்ய முன்வரவில்லை.

பட்டின நாகரிகம்!

பண்டாரி, இரண்டொருவர் உதவியுடன் சாமிநாதனை ரிக்ஷாவில் ஏற்றிப் படுக்க வைத்தான். அடுத்த கணம் வேகமாக, தன்னை மறந்த வேகத்தில், ஓட்டமாய் ஓடினான்.

ரிக்ஷா பட்டணத்து ஆஸ்பத்திரியை நோக்கிக் காற்றாய்ப் பறந்தது.

ஒரு மணி நேரம் சென்றுவிட்டது.

மனைவியின் முதல் பிரசவத்தை எதிர்பார்த்து,

அறைக்கு வெளியே துடிதுடிப்புடன் காவல் நிற்கும் இளம்கணவனைப்போல,பண்டாரியும் ஆஸ்பத்திரியின் விறாந்தையில் பரபரப்படன் காட்சியளித்தான்.

நர்ஸுகள் அங்குமிங்கும் போவதும் வருவதுமாக இருந்தனர். பொறுமை எல்லை கடந்தது. கடைசியில் ஒரு நர்ஸைப் பேச்சுக்கு இழுத்துக்கொண்டான்.

"நேசம்மா, இப்ப பஸ்ஸிலே அடிப்பட்டு ஒருவர் வந்தாரே, அவருக்கு எப்படி இருக்குது?" என்று குரலில் ஆவல் தொனிக்கப் பண்டாரி கேட்டான்.

"ஓ... அந்தக்கேஸா? அவருக்கு உடம்பிலே இரத்தம் இல்லை. இரத்தம் கொடுக்கவேணும். ஆனால் 'பிளட் பாங்'கிலே இரத்தம் இல்லையாம். அதுதான் டாக்டர் யோசிக்கிறார்." – செய்தியைச் சொல்லிப் போகத் திரும்பினாள் நர்ஸ்.

"நேசம்மா, ரத்தமில்லாட்டி 'என்ர ரத்தத்தைத் தாறன். குடுக்கிறியளா, அம்மா" என்று சொன்ன பண்டாரியின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

நர்ஸ் அந்த ரிக்ஷாக்காரனை விசித்திரமாகப் பார்த்தாள்.

"எதற்கும் டாக்டரிடம் கேட்டுச் சொல்லுகிறேன். அதுமட்டும், அந்தவாங்கில் இருந்துகொள்"– ஆதரவாகச் சொல்லி, டாக்டரிடம் விரைந்தாள்.

பண்டாரியின் இரத்தத்தைப் பரிசோதித்த டாக்டர் மகிழ்வுற்றார். இரண்டு இரத்தங்களும் ஒரே ரகமாம், ஒத்துப் போகுமாம்–என்ன விசித்திரம்? ஜாதிக்கு ஜாதி இரத்தம் மாறுவதில்லை!

'நளம்' பண்டாரியின் இரத்தம், ஜாதிமான் சாமிநாதனின் உடலில் பாய்ச்சப்படும் வேலை முடிந்தது. டாக்டர் வெளியே வந்தார்.

இரத்ததானம் செய்த பின்பு சற்று ஆயாசத்துடன் வாங்கில் அமர்ந்திருந்த பண்டாரியின் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்து, நீ செய்தது இரத்ததானமல்ல.அந்த நோயாளிக்கு மறுபிறப்பே வழங்கியிருக்கிறாய். இந்தா பத்து ரூபா என் அன்பளிப்பு... உடலைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்." என்று கூறியபடி, அவனிடம் ஒரு பச்சை நோட்டை நீட்டினார்.

பண்டாரி பணத்தை வாங்க மறுத்துவிட்டான். ஆனால் வேறு ஏதோ கேட்க இச்சை கொண்டவனைப்போல, அவன் கைகளைப் பிசைந்துகொண்டு நிற்பதை அவதானித்தார். அவருக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. "உனக்கு என்ன வேணுமப்பா? என்ன வேணும் கேள்; பயப்படாமல் கேள்" என்றார்.

"டாக்குத்தரய்யா! என்னை ஒரு முறை அவரை–காயம் பட்டவரைப் பாக்கவிடுங்க"

டாக்டர் மகிழ்ச்சியுடன், அவனுடைய வேண்டுகோளை ஏற்றார். அவனுடைய நடத்தை விசித்திரமாகப்பட்டது. இந்த விசித்திரமான நடத்தையை மனதிற்குள் வியந்து கொண்டே ஒப்புக்கொண்டார்.

பதினைந்து நிமிடங்களுக்குப்பின் அவனுடைய விருப்பம் நிறைவேறியது. சோர்வினாலும், பலவீனத்தினாலும் வெளிறியிருந்த சாமிநாதனின் முகத்தை ஆர்வம் பிரதிபலிக்க பண்டாரி பார்த்தான். களைப்புக் கலைந்து, களைகொண்டு, களிப்புடன் அவனை நோக்கினான்.

முழுவிபரங்களையும் நர்ஸின்மூலம் அறிந்த சாமிநாதன், தனக்கு இவ்வளவு உதவி செய்தவன் பண்டாரிதான் என்பதை அறிந்தவுடன், மலைத்தான். ஒரு கணம் வெட்கிக் குறுகினான். மனச்சாட்சியும், நன்றியறிதல் உணர்ச்சியும் அவனைத் துளைத்தன.

"பண்டாரி" என்று அன்பொழுக அழைத்தான், சாமிநாதன்.

அவனும் கட்டிலை நெருங்கினான்.உடனே பித்துப் பிடித்தவனைப்போல,

"சொல்லு பண்டாரி, ஏன் எனக்கு உயிர்ப்பிச்சை தந்தாய். நான் கொடியவன், தீயவன். உன்னை மிருகமாக அடித்தேன்; நீ இருந்த வீட்டை எரித்தேன். நான் நாயிலும் கடையன். ஏன் இந்த நாய்க்கு உதவினாய்?" வார்த்தைகள் முடியவில்லை.

சாமிநாதனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று; கரை புரண்டு வழிந்தது. அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு, "சொல்லு, பண்டாரி சொல்லு" என்று கெஞ்சாக் குறையாகக் கேட்டான்.

பண்டாரியிடம் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. மிகவும் தெளிவான குரலில் அவன் அமைதியாகச் சொன்னான் "நானுன் மனிதன். நீயும் மனிதன், நீயும் நானும் தொழிலாளிகள்"

அந்தக் காட்சியைப் பார்த்து நின்ற நர்ஸின் கண்களிலும் கூட...

*11.09.1955*

தண்ணீரும் கண்ணீரும் தொகுப்பிலிருந்து...

□

சிறுகதை

# நான் என்ன செய்ய?

*சாதாரணன்*



**இ**ண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. லீவு நாள். விடிஞ்சுபோச்சுது. எலாமும் ஏலுமட்டும் அடிச்சுப்போட்டு ஓய்ஞ்சு கிடக்குது. நந்தன் கட்டிலில் கண்ணை மூடிக்கொண்டு இரண்டு பக்கமும் மாறி மாறிப் புரள்கிறான்,

'இண்டைக்கெண்டாலும் நிம்மதியாய் வீட்டிலை படுக்க விடுறாங்களே' ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்திலை உவன் கார்த்திக்குக்கு ஒன்பது மணிக்கு கலியாணம். ஒவ்வீஸ்காரர் எல்லாரும் நிப்பாங்கள். நானும் வேளைக்கு நிக்கிறன் எண்டு சொல்லிப்போட்டன்' நினைவு கலைய, சறத்தைச் சரி செய்து கொண்டு கட்டில்லை இருந்து எழும்பிச் சோம்பல் முறிக்கிறான்.

நந்தன் நச்சரிச்சுக் கொண்டு எழும்பித் தன் காலைக் கடன்களை முடிச்சுக்கொண்டு வெளிக்கிட ஆயத்தமாகிறான்.

"தம்பி, நந்தன் தேத்தண்ணி ஆறிப்போச்சுது. கொஞ்சம் பொறு போட்டுத் தாறன். உழுத்தம்மா பால் புட்டு இருக்கு. அவசரப்பட்டு ஓடாதை" தாய் ராணி அமளிப்பட்டு குசினிக்குள் ஓடுறாள்.

மூத்தது முந்திரிப் பழம் எண்டு சொல்லி வளர்த்த தாய் அவனைப்பற்றிய கவலையில் தன்னை மாய்த்துக் கொண்டிருப்பவள்.

'அவனுக்குமிப்ப நாற்பத்தி மூன்று வயசாகுது. அவனுக்கோ அந்த நினைப்பில்லை. பக்கத்துவீட்டு ராசம் பேரப்பிள்ளையோடை உசாராய் ஊரெல்லாம் சுற்றித்திரியிறாள். எனக்குத்தான் இன்னும் ஒண்டுஞ் சரிவரேல்லை' என்று மனதுள் நொந்துகொள்வது வழக்கமான கதையாகிவிட்டது தாய்க்கு.

'எனக்கு அம்மாதான் எல்லாம்' பால்புட்டை விழுங்கிக்கொண்டு யோசிக்கிறான். பக்கத்து வீட்டுக்

குழந்தை கத்துகிற சத்தம் கேட்குது. 'தன்னைவிட பதினைஞ்சு வயசு குறைஞ்ச ரமேஸின் பிள்ளை; ராசம் அன்ரியின்ரை பேரக்குழந்தை அழுகிற அமளியும் 'ஆராரோ' தாலாட்டும் அவனுக்கு 'நீயும் ஒரு ஆம்பிளையோடா' என்று ஆணி அடிப்பது போல் நெஞ்சைத் துளைக்கிறது.

நந்தனின் தம்பி சுதாவுக்கும் முப்பத்தைந்து வயது. அவனும் அண்ணனுக்கு ஆகவேண்டிய கருமங்களின் காலம் கழிவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.

நந்தன் அலுமரியைத் திறந்து ரெளசர் சேட்டைப் பொருத்தமாத் தேடுகிறான். இண்டைக்கு கலியாணத்துக்கு விசேடமாக நல்ல உடுப்பாய்ப் போடவேணும் எண்டு முயல்கிறான்.

ரெளசர் ஒரு கலர், சேட் ஒரு கலர். பொருத்தமாகப் பார்க்கிறான். வழக்கமாய்ப் போடுறதை விடப் பொருத்தமாய்ப் போட நினைத்தவனுக்கு ஒன்றும் பொருந்துவதாகத் தெரியவில்லை.

வடசேரி தென்சேரியாகவும் மேற்கு கிழக்காகவும் எதுவும் பொருந்தி வரவில்லை.

ஆ... அந்தா அது நல்ல ரெளசர் என்று எடுத்துப் போடுகிறான். சிப்பை இழுத்தான். அது இறுகிக் கிடக்குது. பூட்டுப்படுகிது இல்லை. அதை களட்டி ஒதுக்கி வைத்தான்.

சேட்டுகளைத் தேடினான். லோன்றிக்குச் சேட்டுக்கள் குடுத்து எடுக்கிறதாலை தெறியளும் ஒழுங்காய் இல்லை. ஒண்டைவிட்டு ஒரு தெறிதான் உயிராய்க் கிடக்குது.

ஏதோ, எதையோ எடுத்து உடுப்புப் போட்டுவிட்டு பெல்ற்றைத் தடவுகிறான். கண்டு பிடிச்சுப் போட்டால் கறுத்த பெல்ற் இடையிடையே தேமல் படர்ந்த நிலையிலை கலர் மாறிக் கிடக்குது. என்ரை தலைவிதி என்று தன்னையே நொந்து கொண்டு ஒருமாதிரி வெளிகிட்டுவிட்டான்.

முற்றத்துக்கு வந்து மோட்டச்சைக்கிளை ஸ்ராட் பண்ண முடியேல்லை. புளொக்கைப் பாக்கிறான். அது காபன் கூடிப் போச்சுது. சாவியெடுத்துக் களட்டி புளொக்கைச் சரிசெய்து ஸ்ராட் பண்ணினான். அவன்ரை ரெளசரிலை சாவியின்ரை ஊத்தை அப்பிக்கொண்டது. அவன் அதைக் கவனிக்கேல்லை.

றோட்டுக்கு ஏறவும் முன்னாலை வந்த லொறி பிறேக் போட்டு நந்தனைப் பார்த்து ஏசிப்போட்டு சாரதி முறைத்துக்கொண்டு போகவும் நேரம் சரியாகவிருந்தது.

ஒருமாதிரி திருமண மண்டபத்தை வந்து சேர நேரம் பதினொரு மணியாகிவிட்டது.

நாதஸ்வரம் மேளம் தன்ரை அமளியைச் செய்து கொண்டிருந்தன. சத்தமும் இரைச்சலும் வானைப் பிளந்து கொண்டிருந்தன.

உள் மண்டபத்துக்கு முன்னுக்குப் போய் நாலாம் வரிசையில் தன் அலுவலக நண்பர்களிருந்த இடத்தில் ஒரு கதிரை வெறுமையாக இருந்தது. அதில் நந்தன் அவசரமாக குந்தினான்.

அவன் அருகில் பாலேஸ் அங்கிள் இருந்ததை அப்போதுதான் அவதானித்தான்.

"குட்மோணிங் அங்கிள்" என்று சொல்லிச் சமாளித்தான்.

"என்ன நந்தன் நீ எப்ப சாப்பாடு போடப் போறாய்" என்று தான் பகிடிவிடுவதாகப் பாலேஸ் அங்கிள் கேட்டது நந்தனுக்கோ சம்மாட்டியால் ஓங்கி அடித்ததை அவரால் உணர இயலாது.

போதாக் குறைக்குச் சினேகிதப் பொடியளும் சேர்ந்து "அடுத்த கலியாணச் சாப்பாடு நந்தன் அண்ணான்ரைதானே" என்று உரத்துச் சிரித்தனர். அதைவிட ஐயரின் ஒங்கார ஓசையும் இராச மேளத்தின் தாளக் கட்டு அடியும் ஓங்கி ஒலித்தன.

நந்தன் துவண்டான். மிகமிகக் கஸ்ரப்பட்டுப் புன்முறுவலை வரவழைத்தான்.

சபையோர் கரங்களுக்கு பூக்கள் வழங்கப்பட்டன. தாலிகட்டும் நேரம் வந்ததை மேளம் நாதஸ்வரம் ஓங்கி அறைந்த பேரிரைச்சல் அவனுக்கு உணர்த்தியது.

முன்னுள்ள சபையோர் எல்லோரும் எழுந்து பூக்களை வீசி எறிந்தார்கள்.

பொம்பிளை, மாப்பிளைக்கோ அருகில் படாமல் மேடையின் முன்னிருந்த நந்தனை நோக்கியே அவை வீசப்பட்டதாக அவன் உணர்ந்தான்.

நந்தன் நின்றபடி நட்டமரமானான்.

பூக்களா அவை? கற்கள்! தன்னை நோக்கி எறியப்பட்டதை உணர்ந்து நந்தன் துடித்தான். நிமிர்ந்து நின்று திகைத்தான். அக்கம் பக்கம் பார்த்தான். எல்லோரும் ஆரவாரம் செய்து அமளிப்பட்டு புன்முறுவல் பூத்த முகங்களுடன் அமைதியாக தத்தம் கதிரைகளில் அமர்ந்தனர்.

ஐயரின் சமஸ்கிருதம் ஓங்கி ஒலிக்கிறது.

□




### "ஏன்? " சிறுகதைத் தொகுப்பு

# கடந்தகால அனுபவங்களை இரை மீட்கும் ஒரு காலத்தின் படிமங்கள்

கந்தர்மடம் அ.அஜந்தன்

**19.07.2025,20.07.2025 தினங்களில் மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த கலாநிதி ந. இரவீந்திரனின் 18 நூல்கள் 15 ஆய்வாளர்கள் கலந்துகொண்ட ஆய்வரங்கில் சமரப்பிக்கப்பட்ட கட்டுரை**

என்.எஸ் வாகீசன் என்ற பெயரில் கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களால் 1991இல் வெளியிடப்பட்ட முதலாவது சிறுகதைத் தொகுப்பு"ஏன்?". 11 சிறுகதைகளை உள்ளடக்கிய நூலாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆதரவுடன் சவுத் ஏசியன் புக்ஸ் வெளியிட்டுள்ளது. இலக்கியத்தின் மூலக்கரு மனிதநேயமாக இருக்க வேண்டும் என்று பதிப்புரையில் க.தணிகாசலம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அதிக மனிதர்களையும் மனிதநேயத்தையும் உள்ளடக்கியதாகவே இந்த நூல் அமைந்துள்ளது. இதில் உள்ளடக்கப்பட்ட கதைகளில் பத்துக் கதைகள் 1990 மற்றும் 1991 இல் எழுதப்பட்டவையாகவும், ஒரு கதை 1983ல் எழுதப்பட்டதாகவும் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது.




1990 காலப் பகுதியில் தமிழர் பிரதேசத்தின் போர்க்கால அனுபவங்களை வெளிப்படுத்தும் கதைகளாகவே பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. விமானத் தாக்குதல்கள் பற்றிய அனுபவங்கள், துவிச்சக்கர வண்டிகளின் பாவனைகள் அதிலும் குறிப்பாக பெண்கள் துவிச்சக்கர வண்டிகளை நீண்ட தூரம் ஓட்டிய அனுபவங்கள், பதுங்குகுழிகள், தற்கொலை அல்லது தற்கொலை முயற்சிகள், போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ளல் போன்ற விடயங்கள் கதைகளின் பேசுபொருளாக அமைந்துள்ளன. இது காலத்தைக் காட்டும் குறிகாட்டிகளாக 1990 – 1991 காலப்பகுதியைக் காண்பிக்கின்றது. இவற்றை வாசிக்கின்ற வாசகனின் கடந்தகால அனுபவங்களை மீட்டுத் தருவதோடு எதிர்காலச் சந்ததிக்கும் அந்த அனுபவத்தை விட்டுச் செல்கின்றது. ஒரு நூல் காலத்தின் ஆவணப்படுத்தல் மட்டுமன்றி அதனையும் தாண்டி எதிர்காலச் சந்ததிக்கு எமது வாழ்வியல் அனுபவங்களைக் கொண்டுசெல்லும் ஊடகமாகவும் பயன்படுகின்றது.

மூன்று தசாப்த யுத்த அனுபவங்கள் பல எழுத்தாளர்களின் தவிர்க்கமுடியாத கருப்பொருளாக வருவதில் ஐயமில்லை. ஏனெனில் அதனை அனுபவித்தவர்கள் என்றவகையில் அதன் வடுக்களையும், நினைவுகளையும் பகிர்ந்து கொள்வதற்கும்; அவற்றில் இருந்து விடுபடவும் ஆக்க இலக்கியங்கள் பெரும் பங்காற்றிவருவதை எவரும் மறுக்கமுடியாது. கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களின் பதினெட்டு நூல்களில் ஆக்க இலக்கியமாக அமைந்தது "ஏன்?" என்ற இந்த நூல் மட்டுமே. ஏனையவை ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய காத்திரமான நூல்கள். முதலும் இறுதியுமாக வெளியிடப்பட்ட இந்தச்சிறுகதைத் தொகுப்பு அவரது ஆவணப்படுத்தலில் ஒரு கணிசமான பங்கினை ஆற்றியிருக்கும் என்று நம்புகின்றேன். நூலாக்கற் காலத்தின் தனது வாழ்வனுபங்களும், சக

மனிதர்கள் மீதான அவதானிப்புக்களும் இக் கதைக் களங்களை தோற்றுவித்திருக்கின்றன.

கதைகள் குறுகிய பரப்புக்குள் இயங்கும் மனிதர்கள்பற்றியதாகவும் அமைந்துள்ளன. அவர்களின் எண்ணங்கள், பிரச்சினைகள், நடத்தைக் கோலங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் படர்ந்து செல்லும் கொழுகொம்பாக பாத்திரங்களின் வார்ப்புக்களும் அமைந்துள்ளன. அனைத்துக் கதைகளின் தளமும் ஈழதேசமாக இருப்பதும், கதைகளில் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சொற்கள் 1990–1991 காலப்பகுதிகளைப் பிரதி பலிப்பவையாகவும் அமைந்துள்ளன. துவிச்சக்கர வண்டிகளின் பாவனை, "கிளாக்கர்" என்ற பதவி நிலை, கியூவில நிற்பது, பொம்பர் மற்றும் பங்கர் போன்றவற்றை உதாரணங்களாகப் பார்க்கலாம்.

கதையில் வரும் பாத்திரங்களின் அகவுரையாடல் (தமக்குள் கதைத்துக்கொள்வது அல்லது எண்ணிக்கொள்வது) தன்னிலை விளக்கங்களாகவும், தர்க்கரீதியான எண்ணங்களாகவும், சுய புலம்பலாகவும் அமையப்பெற்றிருப்பது நூலாசிரியர் அழுத்திச் சொல்ல விளையும் சில காத்திரமான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இது வாசகனோடு உரையாடும் அவரின் சிறந்த ஒரு உத்தியாகவே பாரக்கலாம். சில இடங்களில் வெளிப்படையற்ற அல்லது முழுமையற்ற சொற்றொடர்களை பாத்திரங்களின் சம்பாசனைக்குள் வைப்பது வாசகனின் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் தூண்டவல்லதாக உள்ளது.

"உங்கள் மகள் ஓடிவிட்டார்". "அப்படியா ! யாரோடு ஓடினார்?". "தனியாகத்தான்". "தனியாக எப்படி? புரியவில்லையே". "மூன்றுபேர் சேர்ந்து போவதாக திட்டமிட்டவையாம். ஆனால் மற்றவர்கள் காய்வெட்டிவிட இவ மட்டும் எடுத்த முடிவை மாத்தாமல் போய் இணைஞ்சிட்டாவாம்".

என்ற சொற்றொடரின் இறுதியில்கூட பேச்சு முழுமைபெறவில்லை. ஆனால் வாசகரால் அவர் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளார் என்பதை இந்தக் கதை உருவான காலப்பகுதி விளக்கி நிற்கிறது. 1990 – 1995 வரையான காலப்பகுதியில் இளைஞர் யுவதிகளை போராட்டத்தில் இணைத்துக் கொண்டதையும் அல்லது போராட்டத்தில் அவர்கள் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்ததையும் இந்தக் கதைகள் முன்வைக்கின்றன. "பத்துக்குமபபால்" என்ற முதலாவது கதை போராடச் சென்ற மகனை துவிச்சக்கரவண்டியில் தேடியலையும் தாய்க்கும் மகனுக்குமான சந்திப்பையும் நெகிழ்வான உரையாடலையும் எடுத்தியம்பும் கதையாக அமைந்துள்ளது. தாயின் பாசத்தை மகனின் தேசப்பற்று வென்றுவிடுவதாக கதை நிறைவடைகின்றது. "காசா லேசா" என்ற கதையிலும் கிளாக்கர் என்ற பாத்திரத்தின் மகள் போராட்டத்தில் இணைந்துக்கொண்டதை கதையாக்கியுள்ளார். குழுவாகப் போராட்டத்தில் இணையச் சம்மதம் தெரிவித்தல், அவர்களில் சிலர் தமது இலட்சியப் பாதையைத் தெரிவுசெய்ய மற்றவர்கள் பின்வாங்குவது வழக்கமாகவே இருந்துவந்ததையும் இந்தக் கதை காட்டி நிற்கின்றது. முந்திய கதையில் மகனின் முடிவால் ஏற்பட்ட தாயின் மனோநிலையையும், இரண்டாவது கதையில் மகளின் முடிவால் புலம்பும் தந்தையின் மனோநிலையையும் விளக்கியுள்ளார். மூத்த எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமார் அவர்கள் அண்மையில் தனது காணாமற்போன மகனை நினைந்து எழுதிய "முட்காட்டுப் பூ" என்ற நாவலில் தனது மகன் போராடப் புறப்பட்டவேளை தங்களால் தடுக்கமுடியாமல்போன அனுபவத்தை எழுதியிருந்தார். அந்த நாவலை இந்த இரு கதைகளும் நினைவுபடுத்தின.

போர் உக்கிரமடைந்த காலப்பகுகளில் தமது உயிரையோ குடும்பத்தையோ பொருட்படுத்தாமல் கடமையில் ஈடுபட்ட வைத்தியர்களைக் கடந்தகாலங்களில் வைத்தியசாலைகள் கொண்டிருந்தன. அவர்கள் வரலாற்றில் தமக்கென்ற ஒரு இடத்தைத் தக்கவைத்துள்ளனர். இன்னும் பல மருத்துவர்கள் உயிர்த்தியாகங்களையும் செய்துள்ளனர். அவ்வாறான ஒரு மருத்துவரின் கதையைச் சொல்லும் "சமநிலை" என்ற கதை சற்று மாறுபட்ட அனுபவத்தைத் தரக்கூடியது. பணியிலுள்ள கடமையுணர்வு வீட்டில் எவ்வாறு சமநிலையை குழப்புகின்றது அல்லது குடும்பத்திலுள்ள பெண்ணாதிக்க நிலை எப்படி இவரதுபணியில்இடையூறுகளைவிளைவிக்கின்றது என்பதை அசைபோடும் கதையாக அமைந்துள்ளது. தற்கொலை முனைப்போடு மருந்துகளை உட்கொண்ட ஒரு பெண்ணின் மனநிலையை தனது மனநிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் மருத்துவரின் மனப்போராட்டமும், தன் குடும்பத்தின் நன்மதிப்பை நினைவிருத்தி தன்னைத்தானே ஆற்றுப்படுத்துவதும் தற்கொலை எண்ணமுள்ளவர்க்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கின்றது.

"நல்ல காலம்", "சமநிலை", "யமலோக சஞ்சாரம்" ஆகிய கதைகளில் தற்கொலை பற்றிய பதிவுகளை உள்ளடக்கியுள்ளார். இதே காலப்பகுதிகளில் நடைபெற்ற தற்கொலைகளும் நூலாசிரியரின் கதைகளில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளதென்பதை மூன்று கதைகளிலும்

உணரமுடிகின்றது. விமானத் தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிர் அச்சத்தினை பெரும்பாலான கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். இன்று காலை பார்த்த வீடு மறுநாள் காலை விமானத்தாக்குதலால் அழிந்து கிடக்கையில் அங்கு வாழ்ந்த மனிதர்கள் பற்றிய மனிதநேயத் தேடல் வலிமிகுந்தது. அனர்த்தங்களும் மரணங்களும் மனிதநேயத்தைப் புதுப்பிக்கும் அல்லது வளர்க்கும் பெரும் காரணிகள் என்பதை கடந்தகால அனுபவங்கள் எமக்குச் சொல்லிச் சென்றிருக்கின்றன. அவற்றையும் இந்தக் கதைகள் உள்வாங்கி உள்ளன.

"திசை தெரியாத பயணம்" போர் வாடையின்றி எழுதப்பட்ட கதையாகப் பார்க்கலாம். பிள்ளைகளின் ஒற்றுமையின்மையும் தாயின் தவிப்பையும் எடுத்துக்கூறும் கதையாக அமைந்துள்ளது. எங்கோ ஒரு மூலையில் துளிர்க்கும் நம்பிக்கையின் கீற்றில் உயிர்வாழும் தாய்மைக்கே அக்கதை சமர்ப்பணம்.

போரின் மறைவிளைவுகளில் ஒன்றான வாழ்தலுக்கான போராட்டத்தால் ஏற்பட்ட நடத்தைப் பிறழ்வுகள், விதிமீறல்கள் யதார்த்த வாழ்வின் புரிதலை மண்ணில் புதைத்துவிடுகின்றன. தமிழர்களால் மறக்கவியலாத பயண அனுபவங்களில் கேரதீவுப் பயணங்கள், திருகோணமலைப் பயணங்கள் முக்கியமானவை. நீண்ட வரிசைகளும், நிச்சயமற்ற பயணங்களும் சவால்விட விதிமுறைகளை மீறி மணிக்கணக்காய் நிற்பவர்களை ஊடறுத்து உட்புகும் மனிதர்களைப் பற்றிப் பேசும் இந் நூலின் தலைப்பான "ஏன்?" என்ற கதையும் "அகதி" என்ற கதையும் விழிப்புணர்வுப் பதிவாகின்றன.

தேவைக்காக விருப்புடன் செய்யும் தொழிலும் அதையே சேவைக்காகவும் கட்டாயத்தின் பேரிலும் செய்யப்படும்போது பெற்றுக்கொள்ளும் அனுபவங்களையும் ஒப்பிடும் கோபால் என்ற பாத்திரம் எமது பழைய அனுபவங்களை தூசிதட்டித் தருகின்றது. "கோபாலின் ஒரு நாள் பங்கர் அனுபவம்" என்ற கதை இதனை செம்மையாக அலசுகின்றது. ஆட்சி மாற்றங்களும், ஆட்கொள்ளும் துரோகங்களும், மரணத்தில் முடிவடையும் அவர்களின் வாழ்வும் புதுக்கொள்கைகளையும், அரசியல் நிலைப்பாட்டையும் ஏற்படுத்தி எதிரிக்குப் பலம்சேர்த்த கசப்பான கடந்தகாலங்கள் தோல்வியின் முதற்புள்ளியானது. "அவள் வருவாள்" என்ற சிறுகதை அதனையே பேசுகின்ற

தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பட்டை மாற்றியதும் தீராத கோபத்தை உருவாக்கியதுமான யூலைக் கலவரம் வெடித்த ஐந்துமாத காலத்தின்பின் கண்டி பயணமாகும் அரச ஊழியரொருவரின் மனப்போராட்டமும் எண்ணற்ற எண்ணங்களையும் அச்சத்தையும் விபரிக்கும் கதையாக "எனக்கும் உறவுண்டு" அமைந்துள்ளது. கவிதை மட்டுமல்ல கதைகளும் காலத்தின் கண்ணாடிகளாகத் தொழிற்பட முடியும் என்பதற்கு கலாநிதி ந.இரவீந்திரனின் கதைகள் சாட்சி பகிர்கின்றன.

**போர் உக்கிரமடைந்த காலப் பகுகளில் தமது உயிரையோ குடும்பத்தையோ பொருட்படுத்தாமல் கடமையில் ஈடுபட்ட வைத்தியர் களைக் கடந்த காலங்களில் வைத்தியசாலைகள் கொண்டிருந்தன. அவர்கள் வரலாற்றில் தமக்கென்ற ஒரு இடத்தைத் தக்கவைத்துள்ளனர். இன்னும் பல மருத்துவர்கள் உயிர்த் தியாகங்களையும் செய்துள்ளனர். அவ்வாறான ஒரு மருத்துவரின் கதையைச் சொல்லும் "சமநிலை" என்ற கதை சற்று மாறுபட்ட அனுபவத்தைத் தரக்கூடியது.**

கிழக்கிலங்கை மூத்த எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் எழுதிய நாவல்களில் வரும் பாத்திரங்கள், கதைக்களத்தின் சுற்றுப்புறச் சூழல், அவர்களின் உணர்வுப் பரிமாணங்கள் கதைக்குள் எம்மை அழைத்துச் சென்றுவிடும். அண்மைக்கால ஆக்கங்களில் காணப்படும் நிஜங்களை எழுதும் பண்பு கற்பனைக்குச் சுவர் எழுப்பியுள்ளதை மறுக்கமுடியாது. பாத்திரங்களின் பண்புகள், தோற்றம், நடை, உடை, உணர்வெழுச்சிகள் ஆகியவற்றின் வர்ணனைகள் அப்பாத்திரங்களோடு எம்மை இணைப்பதோடு அவர்களின் உணர்வுகள் எமக்குள்ளும் தொற்றிவிட வேண்டும். அப்பொழுதுதான் கதையும் பாத்திரங்களும் வாசகனின் மனதில் பதியப்படும். இயற்கைக் காட்சிகளும், கதைக் களத்தின் பரிமாணங்களும் வர்ணிக்கப்படும்பொழுது அவை எமது மனக்கண்முன் புலக்காட்சியாகப் பதியப்படும். ஏன் இந்தச் சிறுகதை எழுதும் பழக்கத்தை கலாநிதி ந.இரவீந்திரன் கைவிட்டார் என்ற கேள்வியே எனக்குள் எஞ்சியுள்ளது. □

# பயனுள்ள சிந்தனை

*அழ. பகீரதன்*

கேட்பதற் கொப்பார் எவருமெனில் பட்டறிவில்
நல்லுரை சாற்றல் தவிர்.

சொன்னதில் சொன்னவர் யாரெவர் என்றில்
கருத்தில் நிறைவு எனில்.



எதிர்மறைப் பேச்சிலே ஏற்றம் நிகழா
உதிரா திருக்க முயல்.

உழைப்புக்கு ஏற்றதே ஊதியம் வாய்க்க
அமைப்பதை மாற்றலே தேர்வு.

வாசிப்பு மின்னிதழ் ஊடேயும் வாய்க்குமேல்
நேசிப்பு கைபேசி ஊடு.

பயில்வது வாய்க்கும் தொழிலே எனிலே
தெரிந்து ஒழுக்கத்தைப் பேண்.

ஆக்கப் பொருட்கள் பெறுமதி வீழின்
இறுதிப் பொருட்கள் மலிவு.

பசுமையும் நேர்த்தியும் வாய்க்க தெரிவன
தேர்ந்திடும் வீட்டின் வனப்பு.

போய்விட்ட நாட்களும் போலவே ஆண்டின்
முதல்நாள் கலண்டர் கிழிவு.

தேடிய தேட்டத்தை வேண்டியார் யார்க்கும்
பகிர்ந்திடில் அஃதே பயன்.

# ஹோமோன்ஸ்

நவயுகன்



**த**ன்னிடம் வரும்படி அவள் கையாலும் கண்களாலும் சைகை காட்டினாள். அவன் திகைத்து நின்றான்.

கொழும்பு மாவட்ட நீதிமன்ற வெளிவாசற் படியில் அவள் நின்றாள்.

அவன் அதற்கருகிலுள்ள படிக்கட்டுகளால் மேலேறி மேல் நிதிமன்றின் ஒருபக்கத்து வெளிப் புறத்தில் தனது சட்டத்தரணியுடன் நின்றான்.

அவளின் தந்தையும் அவனின் பக்கத்திலேயே அவன் சார்பாக நின்று சட்டத்தரணிக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்போதுதான் அவர்கள் இருவருக்குமிடை யிலான திருமண விலக்குத் தீர்ப்பு நீதிபதியால் அறிவிக்கப்பட்டு வழக்கு நிறைவுற்று விட்டது. திருமணம் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போது இருவரும் பிரிந்த பின்னர் ஏன் இவள் தன்னை அழைக்கிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை.

இருவரும் கிழக்குப் பல்கல்கலைக்கழகத்தில் பத்து வருடங்களுக்குமுன் பயின்றவர்கள். இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

பல்கலைக் கழகத்தில் இருவரும் விரும்பிக் கொண்டனர். பெற்றாரின் சம்மதத்துடன் திருமணம் யாழ்ப்பாணத்தில் இனிதே நடந்தேறியது.

அவன் இப்போது கொழும்பில் வேலை செய்கிறான். அவள் வவுனியாவில் என்.ஜி. ஓ. ஒன்றில் வேலைசெய்கிறாள்.

அவர்கள் வெவ்வேறு இடங்களில் வேலை செய்த காலத்தில் அவர்களுக்கிடையே சந்திப்புக்கள் குறைந்தன.

அவன் ஒரு கொம்பனியில் பொறுப்பதிகாரியாக இருந்தமையால் அவனைச் சந்திக்க மாசம் ஒரு தடவையே இயலுமாகவிருந்தது.

அவள் தன் அலுவலகத்தில் பணிபுரியும் இன்னொருவனுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. அந்த நட்பு காதலாக மாறிவிட்டது.

அந்த இன்னொருவன் ஏற்கனவே திருமணமாகி இரு பிள்ளைகளின் தந்தையாவான். அவனது குடும்பம் வவுனியாவில்தான். அந்த இன்னொருவனுடன் அவள் என்.ஜி. ஓ. பணிகளுக்காகச் சிலகாலம் வெளிநாடும் சென்று வந்தாள். இவர்களது காதல் விவகாரம் அலுவலகத்தில் வேலை செய்த அனைவரும் அறிந்த ஒரு பரகசியமாகியது.

அவள் முடிவெடுத்தாள். தன் கணவனிடமிருந்து விவாகரத்து பெறவேண்டுமென்று. அதற்குச் சில முன்னேற்பாடுகளைச் செய்யத் தயாரானாள்.

அவளது பெற்றோரோ அவளது கணவனுடன் நல்ல வாரப்பாடாய் இருந்தனர். அவனும் அவர் களுக்குத் தேவையான உதவிகளை அவ்வப்போது செய்து வருவது அவனது வழக்கமாயிருந்தது.

இதனால் அவள் தனது பெற்றோரை எவ்வாறு சமாளிப்பது. அவர்களை எவ்வாறு தன்பக்கம் வளைப்பது எனத் தடுமாறினாள்.

அவளைக் காணும் வேளையெல்லாம் தாயும், தகப்பனும் அவனைப்பற்றி அடிக்கொருதரம் பாராட்டிப் பாசத்துடன் பரிமாறும் வசனங்களைக் கேட்டுக்கேட்டு அலுத்தே போய் விட்டாள்.

தனது நண்பர்கள் உறவினர்கள் மூலம் அவனைப் பற்றிய அவதூறுகளைப் பரப்பத் தொடங்கினாள்.

அவன் குடும்ப வாழ்வுக்கோ தாம்பத்திய வாழ்வுக்கோ தகுதியற்றவன், இயலாமையுள்ளவன், தன்னைக் காதலித்து ஏமாற்றிவிட்டான் என்றும் அவன் பற்றிய கதைகளை அவ்வப்போது அவிட்டுவிட்டாள்.

அவன் அக்கதைகளைப் பிறர் குற்றச்சாட்டாகச் சொல்கிற வேளையெல்லாம் அவற்றைப் பொறுமை யுடன் சகித்துக்கொண்டான்.

அவன் அவ்வேளைகளிலெல்லாம் அவன் அவமானத்தால் கொதித்துக் கொண்டிருந்தான். இத்தகைய அபாண்டங்களையெல்லாம் அவள் ஏன் அவ்வாறு சொல்லிக்கொள்கிறாள் என்று அவஸ்தைப்பட்டான்.

"இவனும் ஓர் ஆம்பிளையா" என்றும் கூச்சப்படாமல் பலரிடமும் பரப்புரை செய்திருந்தாள்.

எல்லாம் முடிந்துவிட்டது. உறவு சட்டரீதியாகவும் பிரிக்கப்பட்டு விவாகமும் நிர்மூலமாகிவிட்டது. அவளது விருப்பத்துக்கு விரோதமாக- அவள் விரும்பும் விவாகரத்துக்கு மாறாக அவன் தன் வழக்கைச் சட்டத்தரணி மூலம் எதிர் வாதிட முயலவில்லை.

இப்போது மட்டும் நீதிமன்றுக்கு வெளியே தன்னிடம் வரும்படி ஏன் இவள் சைகை காட்டுகிறாள் என்பது அவனுக்கும் ஆச்சரியமாகவிருக்கிறது.

தனது சட்டத்தரணியை இப்போது திரும்பிப் பார்க்கிறான். "அவள் என்னை வரும்படி சைகை காட்டுகிறாள் சேர். நான் என்ன செய்வது" எனச் சிறுபிள்ளை போல் சட்டத்தரணியின் முகத்தை உற்று நோக்குகிறான்.

சட்டத்தரணியும் "கூப்பிட்டால் என்னவென்று சென்று கேளுங்கள். பிரச்சினை இல்லை" என்கிறார்.

அவன் அவள் அருகே செல்கிறான். அவள் அழுகிறாள். அவன் நிதானமாக அனுதாபத்தோடு அவளைப் பார்க்கிறான்.

அவள் சொல்கிறாள். "நான் உங்களைப் பற்றி இல்லாதது பொல்லாததெல்லாம் சொல்லி உங்களை அவமானப்படுத்திப் போட்டன். நான் செய்த பிழையை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்று சொல்லித் தேம்பி விக்கி அழுகிறாள்.

அவன் அவளைத் தோளில் தட்டி "டோன்ற் வொறி, அதைப்பற்றிக் கவலைப்படாதேங்கோ. பிரச்சினை இல்லை. சரி... நான் வாறன்" என்று சொல்லிவிட்டு மேலே சட்டத்தரணியை நோக்கி படிக்கட்டில் ஏறி வருகின்றான்.

சட்டத்தரணி அவனிடம் என்ன, ஏது என்று விசாரிக்கிறார். அவன் நடந்ததைச் சொல்கிறான்.

"என்ன செய்யிறது சேர். ஆரைச் சொல்லி என்ன குற்றம். எல்லாம் ஹோமோன்ஸ்சின்ரை விளையாட்டுத்தான்"

என்று சொல்லிவிட்டு நீதிமன்றுக்கு வெளியே போகின்றான்.

அவளின் தந்தை அவனை- தன் மருமகனைப் பார்த்தபடியே விறைத்தபடி நீதிமன்றத் தூணுடன் சார்ந்து கொள்கிறார்.

□

தென்புலத்தார்
தொழுதேற்றல்

# எமது மண்ணின் மனச்சாட்சியாக வாழ்ந்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் குறுவரலாறு



*நா. நவராஜ்*

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் ஈழத்தின் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி வடக்கில் 15.11.1931 இல் பிறந்தவர். தகப்பனார் மயில்வாகனம். தாயார் அசுவதி. தனது ஒன்பது வயதுவரை நீர்கொழும்பில் வளர்ந்த அவர். தனது ஆரம்பக் கல்வியை போளவத்த றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். 1940 களில் மீள யாழ்ப்பாணம் திரும்பித் திருநெல்வேலியில் தனது 'தாயகம்' வீட்டில் வசித்தார். கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் (1941 –1950 வரை) தொடர்ந்தார். நான்கு தமையன்மார்களுக்கு இளையவர் என்பதால் குழந்தை எனத் தாய் தந்தையரால் செல்லமாக அழைக்கப்பட்டார். இப்பெயரே இன்று அவரது அடையாளமாக முன்நிற்கின்றது.

1950 களில் பாடசாலைக் கல்வி முடித்து வீட்டில் இருந்து பொழுதுபோக்கிய இவரைத் தாயார் பொம்பிளைப்பிள்ளையள் போல வீட்டுக்குள் இருக்கிறான் வெளியே கூட்டிச்செல் என்று இவரது நண்பரிடம் கூற அவர் திருநெல்வேலியில் உள்ள இந்துவாலிபர் சங்கத்திற்கு இவரை அழைத்துச் சென்றார். 1950ஆம் ஆண்டில் அங்கு செயலாளராக இருந்த இவரது அயல்வீட்டவர், இவர் முன்னர் வீட்டில் இருந்து உதடுகளை உள்ளே மடித்து வைத்து வயதானவர் போல் பேசிப் பாவனைசெய்வதைப் பார்த்த நிகழ்வினால் தூண்டப்பட்டு அச்சங்கத்தில் நடைபெற்ற நாடகம் ஒன்றில் வயதான பாத்திரத்தில் நடிக்குமாறு கட்டளையிட்டமையால் இவர் தனது 19வது வயதில் நாடக உலகில் பிரவேசித்தார். சுய விருப்பின்றியே அதில் அவர் நடித்தார். இதன் மூலம் இந்துவாலிபர் சங்கத்தில் நடித்துக்கொண்டிருந்த விதானையார் கொமிக் செல்வரத்தினத்துடன், தொடர்பு உருவாக அவரது தூண்டுதலில் இருவரும் இணைந்து புதிதளித்தல் முறையில் நாடகச்செயற்பாட்டினைத் தொடர்ந்தனர்.

1953களில் இந்தியா சென்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் (1953 –1957 வரை) கலைமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு திரும்பிய இவர். 01.10.1957 செங்குந்த இந்துக்கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று 1972 வரை அங்கு கற்பித்துப் பின்னர் 1972 இல் இருந்து 1981 வரை பளை



மகாவித்தியாலயத்திலும் 1981 இல் இருந்து 1987 வரை மீளச் செங்குந்த இந்துக் கல்லூரியிலும் (ஒருவருடம் (1986 இல் ) அதிபராகவும்) பணிபுரிந்து. 04.01.1987 இல் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்றார். கற்பித்த பாடசாலைகளிலும் நாடகம்சார் செயற்பாடுகளை மேற்கொண்டார்.

1958 இல் இந்து வாலிபர் சங்கத்தில் செயலாளராக இருந்தபோது தான் எழுதிய 'அருமை நண்பன்' என்ற தனது முதலாவது நாடகத்தை விதானையாருடன் இணைந்து நெறியாள்கை செய்து இந்துவாலிபர் சங்கத்தில் மேடையேற்றினார். இக்காலப்பகுதியில் ஈழத்து நாடக ஆளுமையான கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தொடர்பும் அவர் நெறியாள்கை செய்த பி.எஸ் இராமையாவின் 'தேராட்டி மகன்' நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றார். அது இவரது நாடக வாழ்வின் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இதன்மூலம் ஓறியன்ஸ் விளையாட்டு நுண்கலைச் சங்கம், மறுமலர்ச்சி மன்றம் போன்றவற்றோடு இணைந்து நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1961 இல் 'வையத்துள் தெய்வம்' என்ற நாடகத்தை எழுதி 1974 இல் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் மேடையேற்றினார். 1975 இல் அரங்கத்தார் என்ற குழுவை உருவாக்கி அக்காலத்தில் ஈழத்தில் அமுற்படுத்தப்பட்ட நெற்காணிச் சட்டத்தைக் கருவாக்கி இருபொருள்படுமாறு 'அன்னத்துக்கு அரோகரா' (1975) என்ற பெயரிட்டு விமர்சித்து நகைச்சுவையாக விதானையாருடன் இணைந்து அரங்காற்றுகை செய்தார். நடிகராக நாடக எழுத்தாளராகத் தன்னை வெளிப்படுத்தினார்.

1976 தையில் இருந்து 1977 களின் இறுதிவரை



இருவருடங்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான நாடக டிப்ளோமாக் கற்கை நெறியில் இணைந்து கற்றார். நாடகம் உலகு தழுவியதாகக் காத்திரமான விடயங்களை உள்ளடக்கிய ஒரு பாடப்பரப்பாக இருப்பதை உணர்ந்தார். டிப்ளோமாக் கற்றுவரும் காலங்களில் தர்மசேன பத்திராஜாவின் பொன்மணி திரைப்படத்திலும் நடித்தார். (பின்னர் 2005 களில் அவரது தெருப்படவகையைச் (Road Film) சேர்ந்த In Search of a Road என்ற ஆவணப்படத்திலும் நடித்தார்). டிப்ளோமாக் கற்கை நெறியின் முடிவில் யாழ்ப்பாணம் திரும்பி சங்கங்கள், மன்றங்கள், சபாக்கள் என்ற அமைப்புக்களைக் கொண்டு நடைபெற்று வந்த நாடகச் செயற்பாடுகளில் இருந்து வேறுபட்டு நாடகம் என்பது கல்வியாக இருக்கின்றது. அது கற்பதற்கு உரியவொன்று என்பதை வெளிப்படுத்தும் முகமாக 'நாடக





அரங்கக் கல்லூரி' என்ற பெயரோடு ஓர் அமைப்பை 23.01.1978 இல் நிறுவினார். அதன் மூலம் நாடகக் களப்பயிற்சிகளையும் நாடகத் தயாரிப்புக்களையும் நாடக மேடையேற்றங்களையும் மேற்கொண்டார். இதன் மூலம் ஈழத் தமிழ்க் கல்விப்புலத்தில் நாடகம் சார்ந்த செயற்பாடுகள் தோன்றுவதற்கு முக்கிய பங்களித்தவராக, "ஈழத்தின் சமகால நாடகப் புரட்சியின் தாய்" ஆக கருதப்படுகின்றார்.

டிப்ளோமாக் கற்கையின் போது பார்த்த "சத்துங்கே புஞ்சிக் கெதற" (மிருகங்களின் சின்ன வீடு) என்ற சிங்கள நாடகத்தின் தழுவலாகச் சிறுவர்களுக்காகப் பெரியவர்கள் நடிக்கும் சிறுவர் நாடகத்தை 1978 களில் "கூடிவிளையாடு பாப்பா" என்ற பெயரில் எழுதி 1979 களில் தாசீசியஸ் நெறியாள்கையில் ஆற்றுகை செய்ததன் மூலம் ஈழத்து சிறுவர் நாடகத்தினைப் படச்சட்ட மேடைக்குரியதாக ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்துக்குள் கொணர்ந்து ஈழத்தமிழ் நாடகத்தில் முறையான வடிவத்துடன் கூடிய சிறுவர் நாடகத்தினை உருவாக்கிய முன்னவராகக் கொள்ளப்படுகின்றார். இந்நாடகத்துடன் "குழந்தை" என்ற பெயர் நாடக உலகில் மேற்கிளம்பியது. அவர் குழந்தை ம. சண்முகலிங்கம் ஆனார்.

க.பொ.த உயர்தரப் பாடவிதானத்தில் 1977 இல் இணைக்கப்பட்ட நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் பாடசாலை மட்டத்தில் 1979 களில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் முதன்முதலில் ஆரம்பிப்பதற்குக் குழந்தை அவர்கள் மூலகாரணமாக இருந்ததோடு. அவ்வகுப்பில் கற்கப் புகுந்த மாணவர்களுக்கு நாடகபாடத்தினை பாடசாலையிலும் தனது வீட்டிலும் இலவசமாகக் கற்பித்தும் வழிகாட்டினார். 1984 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகம் ஒரு பயில் துறையாகத் தொடக்கப்பட்ட காலத்தில் பேராசிரியர் சிவத்தம்பியின் அழைப்பின் பேரில் சென்று கற்பித்தலை மேற்கொண்டுவந்த இவர் 04.01.1987 இல் ஓய்வு பெற்றபின்னர். 05.01.1987 இல் இருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் நாடக வருகை விரிவுரையாளராக இணைந்து 2004 வரை கைம்மாறு கருதாது உலகநாடக வரலாற்றினைப்படிப்பித்தும் நாடக பாடத்திற்கான பாடத்திட்டங்களை வகுத்தும், வந்ததோடு மாணவர்களின் தேவைகருதிப் பல நாடகங்களின் மொழிபெயர்ப்புக்களைப் பல்கலைக்கழகத்தின் நாடக வகுப்பறைகளில் மேற்கொண்டார். வடஇலங்கைச் சங்கீத சபையின் நாடகக் கற்கைகளுக்கும் தனது பங்களிப்பினை வழங்கியதோடு 2003 களில் தேசிய கல்வியியல் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியாகத் தொடங்குவதற்குப் பின்புலமாகவும் இருந்தார். பட்டங்களை விரும்பாத இவருக்கு 15.12.2001 ஆண்டில் மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது. நாடகம் கல்வியாகத் தொடங்கியதன் பின்னர் நாடகக் கல்விக்குக் கிடைத்திருக்கும் கௌரவம் அது என்பதால் அதனை மறுக்காது பெறுமாறு பேராசிரியர் சிவத்தம்பி அறிவுறுத்தியமையால் அதற்கு அவர் சம்மதித்தார்.

இவரது முக்கியமான நாடக எழுத்துருக்கள் பல இருப்பினும் அவற்றுள் வையத்துள் தெய்வம், கூடிவிளையாடு பாப்பா, உறவுகள், முயலார் முயல்கிறார், மாதொருபாகம், மண்சுமந்த மேனியர், அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும், வேள்வித் தீ, யார்க்கெடுத்துரைப்பேன், ஆரொடுநோகேன், நீ செய்த நாடகமே, நரகொடு சுவர்க்கம், மனத்தவம், ஆர்கொலோசதுரர், பஞ்சவர்ண நரியார் போன்றவை இன்றுவரை பலராலும் பேசப்படுபவையாக விளங்குகின்றன.

நடிப்பு, நாடகக் களப்பயிற்சி, நெறியாள்கை, நாடகக் கற்பித்தல், நாடக எழுத்துருவாக்கம் நாடகமொழிபெயர்ப்பு, சிறுவர் நாடகம் போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தி "எமது மண்ணின் மனச்சாட்சியாய்" விளங்கிய இவர், தனது 93வது வயதில் (17.01.2025 இல்) தனது "தாயகம்" இல்லத்தில் காலமாகிக் காலமாய் ஆகினார். இவர் நூற்றுநாற்பத்திரண்டு வரையான எழுத்துருக்களை எழுதியுள்ளதோடு அறுபது வரையான நாடகங்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழியாக்கமும் செய்துள்ளார்.

இளையோர் இலக்கியம்

# அறிவுத் திறமையால் தந்தையின் தொழிற்சாலைகளை அடையப் பெற்ற மகன்

*காலைச் செஞ்சூரியன்*



பல்வேறு தொழிற்சாலைகளை நடத்திவந்த தொழிலதிபரான சுந்தரம் அவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தனர். முதுமையை அடைந்த அவர், தனது பிள்ளைகளில் யார் தனது தொழிற்சாலைகளைத் தனக்குப் பின்னர் நடத்தும்திறமையைக்கொண்டிருக்கிறார் என்று அறிய ஆசைப்பட்டார். அதற்காக மூவருக்கும் ஒரு சோதனை வைக்கத் தயாரானார்.

தனது மூன்று மகன்மாரையும் ஒன்றாக அழைத்த சுந்தரம், விடயத்தைத் தெரிவித்தார். மூவரும் போட்டிக்குத் தயாரானார்கள். முழுவதும் சுத்தம் செய்யப்பட்ட மூன்று மூடிய அறைகளைக் காட்டி, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறையை ஒதுக்கி, 'இந்த அறையை மிகக் குறைவான பணச் செலவில் இன்று மாலைக்குள் எவரது உதவியையும் பெற்றுக்கொள்ளாமல், தனியாக யார்



முழுமையாக நிறைக்கின்றீர்களோ, அவருக்கே எனது தொழிற்சாலைகளை வழங்குவேன் எனத் தெரிவித்தார்.

துரிதமாகச் செயற்படத் தொடங்கிய மூத்த மகன், தனக்கு வழங்கப்பட்ட அறையை வைக்கோல் கொண்டு நிறைக்கத் தொடங்கினான். இரண்டாவது மகன் மிகவும் கடினமாக உழைத்து, மணல் கொண்டு அறையை நிறைக்கத் தொடங்கினான். அமைதியாக இருந்த மூன்றாவது மகன், சிந்தித்துச் செயற்பட முயன்றான். மாலை தந்தையார் மூவரில் யார் வெற்றி பெற்றவர் என்பதை ஆராயப் புறப்பட்டார்.

உடைகளில் மிகவும் அழுக்குடன் நின்ற மூத்த மகனுக்குரிய அறையைத் திறந்தபோது, வைக்கோல் மணம் அவரைத் தாக்கியது. வைக்கோல்களுக்கு இடையே இடைவெளிகளும் தென்பட்டன. அவன் முழுமையாக அறையை நிறைக்கவில்லை என்ற கவலையுடன், மிகவும் களைப்புடன் இருந்த இரண்டாவது மகனுக்கு வழங்கப்பட்ட அறையைத் திறந்தார். காலடியில் மணல் கொட்டியது. எவ்வளவோ மணலை அறைக்குள் நிறைத்தபோதும், மேற் பகுதியில் சிறிய இடைவெளி காணப்பட்டதைப் பார்த்த தந்தை, அந்த மகனும் இந்தப் போட்டியில் வெற்றி பெறவில்லையே என்ற மனவருத்தத்துடன், இளைய மகனின் அறைக்குச் சென்றார்.

அழுக்கோ, களைப்போ இன்றி நின்ற அந்த மகன் என்ன செய்து தன் அறையை நிறைத்துள்ளான் என்ற ஆவலுடன், அவனுக்கு ஒதுக்கப்பட்ட அறையைத் திறந்த தந்தை ஆச்சரியமடைந்தார். அறையின் மத்தியில் ஒரு தீபம் மிகவும் சுடர்விட்டுப் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அதன் ஒளியால் அறை நிறைந்திருந்தது. அந்த மகனே அப் போட்டியில் வெற்றி பெற்றான் என அறிவித்த தந்தை. தனது தொழிற்சாலைகளைத் திறம்பட நடாத்திச் செல்லக்கூடியவன் அவனே என்பதை உணர்ந்து, அவனுக்கே தனது தொழிற்சாலைகளைக் கையளித்தார்.



தென்புலத்தார்
தொழுதேற்றல்
நூல்நயம்

# வீரகாவியம்




**( "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் நினைவில் வாழும் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை )**

*சோ. தேவராஜா*

உட்கட்சி முரண்பாடுகளில் கோட்பாடு சார்ந்த முரண்பாடுகளால் கட்சியில் 1978 களில் மீண்டும் பிளவு ஏற்பட்டது. இது வ.சுவை மட்டுமன்றி அவரது வீட்டில் அனைவரையும் பாதித்தது. " முரண்பாடு பற்றி நூல்கள் எல்லாம் இத் தோழர்களும் படித்திருப்பார்களே... என மனது அடித்துக்கொண்டது.' (பக்கம் 127) என வ.சு. தன் கருத்தை பதிவு செய்துள்ளார். மேலும் " இந்தியாவில் பாலதண்டாயுதம் என்ற தோழரும் அவரது மனைவியும் கட்சி பிளவடைந்த போது கொள்கை முரண்பாட்டால் அவர்களும் பிரிந்தனர் என வாசித்திருந்தேன்." (பக்கம்–128) என வ.சு தன் இயல்பான தவிப்பையும் வெளிப்படுத்தியுள்ளார்.

வ. சு. வின் கவலை நியாயமானது. அடிப்படை முரண்பாடு, பிரதான முரண்பாடு பற்றியும், சிநேக முரண்பாடு, பகை முரண்பாடு பற்றியும் ஜனநாயக மத்தியத்துவம், ஐக்கியமும் போராட்டமும் உட்கட்சிப் போராட்டம் பற்றியும் தெளிவுகள் தத்துவார்த்த ரீதியில் இருந்த போதும் மாக்சியக் கட்சிகள் தூய்மைவாதம், தாராளவாதம் போன்ற நோய்களுக்கு ஆட்பட்டமையால் மாக்சிய இயக்கங்களில் கட்சிகளின் முக்கியத்துவத்தையும் ஸ்தாபனப் பற்றுறுதியையும் நடைமுறையில் பிரயோகிக்கத் தவறிய தேக்கத்தால் மாக்சிய இயக்கங்கள் பாரிய தோல்விகளைச் சந்தித்துள்ளமை வரலாற்றுத் துயரமாகும்.

தோழர் மணியம் அவர்களும் ஓய்வின்றியே இருந்தார். உண்மையில் நான் அவரிடம் இது பற்றிக் கேட்கவில்லை. தோழரை நானும் கஷ்டப்படுத்தக் கூடாது என நினைத்தேன். ஆனால் என் மூத்தவர் எல்லாவற்றையும் உணர்ந்து அறியும் தன்மையைக் கொண்டிருந்தார். அவரே சில விஷயங்களைச் சொல்வார். தோழர்கள் செந்தில், தணிகாசலம், நவரத்தினம், வன்னியசிங்கம், சுப்பையா, நிச்சாமத்துத் தோழர்கள், காலையடித் தோழர்கள் என அனைவரும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். சிங்களத் தோழர்கள் பற்றிய விபரம் முதலில் எனக்குத் தெரியவில்லை. (பக் 128)

1978–ம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் நிறுவப்பட்டது. இதன் நிர்வாகப் பொதுச்செயலாளாராகத் தோழர் கே.ஏ.சு தேர்ந்தெடுக்கப்பட்டார்.(பக்கம் 129)

தோழர் கே.ஏ.சுவின் மறைவின் பின்னர், 1991–ம் ஆண்டு நடந்த 2வது தேசிய மாநாட்டில் கட்சி தனது பெயரை 'புதிய ஜனநாயக கட்சி' என மாற்றிக் கொண்டது. பின்னர் 2010 யூன் மாதத்தில் கொழும்பில் இடம்பெற்ற 5 வது அனைத்து இலங்கை மாநாட்டில் தன் பெயரை 'புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி' என மாற்றிக் கொண்டது.'( பக்கம் –130)

1964 ஆம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு கூறாகப் பிளவடைந்தது. இப் பிளவினை அடுத்து, தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் மார்க்சியம், லெனினியம், மற்றும் மாவோசேதுங் சிந்தனையில் உருவான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங் சார்பு) உடன் தோழர் தன்னை இணைத்துக்கொண்டார். இடையில் 1963ல் வாலிபர் அமைப்பு மற்றும் கட்சிப் பிரதிநிதியாக மக்கள் சீனக் குடியரசுக்கு ஒரு மாதம் 1963 ஜுலை 20 வரை சென்றார். அந்தக் காலப் பகுதியில தான் இன்றைய கட்சித் தலைமைத் தோழர் செந்திவேல் கட்சியில் இணைந்து கொண்டார்.

நாங்கள் காலையடி, பண்டத்தெருப்புக் கிராமத்தில் வாழ்ந்த 1966–1971 ஐந்து வருட காலத்தில் தான் பொதுவுடமை கட்சி தனது செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்துச் சென்ற காலமாகும்.

தோழர் மணியம் அவர்கள் 1967 இல் சோஷலிச நாடுகளான சீனாவுக்கும், அல்பேனியாவுக்கும் வாலிபர் மாநாட்டுப்பிரதிநிதியாகச் சென்று வந்ததும், 1969 'மேதின ஊர்வலத்தில் பங்கு கொண்டு தாக்குதலுக்கு ஆளானதும், சங்கானையிலுள்ள நிச்சாமம், மட்டுவில், கன்பொல்லை போன்ற கிராமங்களில் ஒடுக்கப்பட்டோரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும், தென்னிலங்கையில் இருந்து புத்த பிக்கு தொடக்கம், கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி. பண்டாரநாயக்க வரை வந்து பார்வையிட்டதும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசமும் ஆகிய முக்கிய நிகழ்ச்சிகள் இடம்பெற்ற காலம்.

‘1967 ல் அல்பேனியாவில் நடைபெற்ற வாலிபர் அமைப்பு மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட வாலிபர் சங்கப் பிரதிநிதியாகத் தோழர் மணியமும் தோழர் ரோகண விஜேவீராவும் கலந்து கொண்டனர்.’(பக்கம்–66)

தோழர் மணியம் அவர்களுடன் சில சிங்களத் தோழர்கள் மக்கள் சீனத்திலும் ஐரோப்பிய அல்போனிய நாட்டிலும் நடைபெறும் வாலிபர் மாநாடுகளில் பங்கு பற்றுவதற்காக அழைக்கப்பட்டனர். அல்பேனியாவில் நடைபெற்ற மகாநாட்டில் ஜே.வி.பி. ரோகண விஜயவீராவும் கலந்துகொண்டார் எனச் சொன்னார். அங்கு இவர்களைப் போலவே பல நாட்டு முற்போக்கு வாலிப இயக்கத் தோழர்களும் சமூகமளித்திருந்தனராம். எழுச்சி மிகு வாலிப மாநாட்டு உரைகளும், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களும் தங்களைப் புதுமையான வழியில் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்திருந்தனவாம். ஒவ்வொரு தன்னலமற்ற தோழர்களின் செயற்பாடுகள் எப்படி மக்களைச் சென்றடைகின்றன என்பது பற்றிச் சிந்திக்க வைத்ததாக அமைந்திருந்தன எனக் கூறினார். பல படங்கள் இருந்தன. ஒன்றுடன் ஒன்று ஒட்டிய நீண்ட படங்கள் முழு மகாநாட்டையும் அடக்கியதான படங்கள் இருந்தன. இடப்பெயர்வு பலதை இழக்கப் பண்ணிவிட்டது.

இதில் எஸ். டி. பண்டாரநாயக்க பற்றி அவருக்கும் எனக்குமான அக்கறைகள் குறித்தும் நிச்சயமாகப் பகிர வேண்டும். (82)

யார இந்த எஸ்.டி. பண்டாரநாயக்க என்பது முக்கியம். பண்டா–செல்வா ஒப்பந்தம் 1956களில் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜே.ஆர். ஜெயவர்த்தன அதற்கெதிராக கண்டி யாத்திரை புறப்பட்டபோது இனவெறியூட்டும் ஜே. ஆரினதும் அக்கும்பலையும் ‘இம்புல்கொட’என்ற இடத்தில் வைத்துத் துரத்தியதுடன் ஜே. ஆரின் யாத்திரை முடிவுற்றது. இதனால் ‘தோழர் எஸ். டி. ஐ ‘இம்புல்கொட வீரயோ’ எனச் சிங்கள– தமிழ் மக்களை புகழ்ந்தமையை இவ்வேளை நினைத்துப் பார்க்கிறேன்.

சாதிப்பாகுபாடுகளுக்கு எதிராகக் கம்யூனிஸ்ட் கட்சி 1966 இல் போராட்டம் நடத்தியதற்கான காரணமே, தேனீர்க் கடைகளில் சிரட்டைகளில் தேநீர் கொடுப்பது, தாகத்தால் தண்ணீர் கேட்கும் மக்களுக்குக் குவளைகளில் தண்ணீர் தராமல் கைகளை ஏந்திக் குடிக்க வைப்பது, பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாமை, குளங்களில் குளிக்க முடியாமை, ஆலயங்களில் நுழைய அனுமதி மறுப்பு, திருவிழாக்களில் தேர், சில தெருக்களில் போகவிடாது திரும்புதல், பொது மயான உரிமை இல்லை, பொது மயானத்தில் சாதி வாரியாக இடம் ஒதுக்கீடு, தனி மயானம் இருந்தாலும் மயானத்திற்குச் செல்ல பொதுப்பாதை மறுப்பு, பாடசாலைகள், மருத்துவம் என எல்லாவற்றிலும் ஒடுக்குமுறை தலைவிரித்தாடியதே.(பக்83)

எஸ். டி. பண்டாரநாயக்க அவர்கள் தான் கேட்ட, பார்த்த நிகழ்ச்சிகள் பற்றிப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்நேரம் அது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பிரதிபலிப்பு அடுத்து வந்த தேர்தல் முடிவுகளிலும் வெளிப்பட்டது. உயர்சாதியினர் அனைவரும் கெட்டவர்கள் அல்ல. ஒரு சில வக்கிர உணர்வு கொண்டவர்களே தீயிட்டு குடிசைகளை அழித்தவர்களாவர். (பக் 84)

இது இப்படி நடக்க, நிச்சாமத்தில் இரு ஜாதியினரிடையே சண்டை உருவானது. ஒடுக்கப்படும் மக்களை உயர்சாதியினர் காவற்படையின் உதவியுட.ன் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். இதனால் தோழர் நல்லப்பு தலைமறைவாக எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தார். (பக். 103)

1979இல் மக்கள் சீனக் குடியரசுக்கு தோழர் கே. தணிகாசலம் (தாயகம் இதழின் ஆசிரியர்) அவர்களும் தோழர் மணியம் அவர்களும் சென்று வந்தனர். எங்கு சென்றாலும் தோழர் மணியம் எழுதும் கடிதங்கள் உலக அறிவையும் சமூக அக்கறையையும் தூண்டுபவையாகவே இருக்கும். (பக் 133)

எமது வீட்டில் தோழர் கதிரவேலுவும் எங்களுடன் தங்கியிருந்தார். இங்கு தோழரோ கொள்கையற்ற நடைமுறையும், நடைமுறையற்ற கொள்கையைப் பற்றியும் எனக்கு மட்டுமல்ல, வருபவர்களுக்கும் செயற்பட்டு வந்த தமிழ் போராளிகளது போராட்ட வடிவத்தின் அனர்த்தப் போக்குகள் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். அதைவிடவும் இந்தியாவுக்குப் போராளிகளை உருவாக்குவதிலும் பயிற்சி அளிப்பதிலும் உள்ள முனைப்பையும், அதனால் ஏற்படவுள்ள ஆபத்தையும் தோழர் விமர்சித்தபடி இருந்தார். அதனைச் சில இளைஞர்கள் உற்றுக் கேட்டனர். சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கை அரசும் திட்டமிட்ட குடியேற்றங்களில் முனைப்புக் காட்டியது. இதே காலத்தில் கட்சி இலங்கை முழுவதும் ஓரளவு வியாபிக்க ஆரம்பித்தது. இரவியும் மலையகத்தில் வேலை செய்ததனால் அங்கு புதிய பல தோழர்கள், தம்பையா, இராஜேந்திரன் உள்ளடங்கலாக உருவாகினார்கள். (பக் 156)

1984 செப்டம்பர் 2, 3 நாட்களில்

கட்சியின் முதலாவது தேசிய மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (பக்156)

1986 மேதினம் ஐக்கிய மேதினமாக அமைந்திருந்தது. நவசமசமாசக் கட்சித் தோழர் அண்ணாமலை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ சார்பு) தோழர் அ. வைத்தியலிங்கம், தோழர் எஸ். விஜயானந்தன், தோழர் ச. திருநாவுக்கரசு என இடதுசாரியக் கருத்துடைய அனைவரும் இணைந்து யாழ் நகரில் ஆரம்பித்துக் கொக்குவில் பொது மைதானத்தில் மிகமிக எழுச்சியுடன் நடாத்தினர். தோழர் மிக நோய்வாய்ப்பட்ட நிலையில் கையில் கட்டுடன் மிக உற்சாகமாக, முற்போக்கு சக்திகளின் இணைவு தந்த மகிழ்வுடன் பேசினார். (பக். 199)

தோழர் மணியம் அவர்களின் மறைவின் பின்னர், 1991 ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது தேசிய மாநாட்டில் தனது பெயரை 'புதிய ஜனநாயகக் கட்சி' என மாற்றிக்கொண்டது. பின்னர் 2010 யூன் ஆரம்பத்தில் கொழும்பில் இடம்பெற்ற 5வது அனைத்து இலங்கை மாநாட்டில் தனது பெயரை "புதிய ஜனநாயக மார்க்சிச– லெனினிசக் கட்சி" என மாற்றிக்கொண்டது. இன்று தோழர் சி.கா. செந்திவேல் அவர்கள், இதன் பொதுச் செயலாளராக வழி நடாத்தி வருகிறார்.(பக் 130)

கே. ஏ. சு. வின் மறைவில் மணியம் பற்றி ஏ.ஜே. கனகரத்தினா எழுதினார்.

'இக்கட்டான இன்றைய நிலையில், வடபகுதி இடதுசாரி இயக்கத்திற்குத் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தன் வாழ்நாள் முழுவதும் உழைக்கும் மக்களுக்காக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி வந்தார். அவருடைய போராட்ட வாழ்க்கையைப் பற்றி நான் அதிகம் கூற வேண்டியதில்லை. ஏனென்றால் பலராலும் அறியப்பட்ட ஒன்றே. தனிப்பட்டமுறையில் அவரது மறைவால் நான் ஓர் உணமையான நண்பனை இழந்துவிட்டேன். இதை எழுதும் போது அவரது சிரித்த முகம் எனது அகக்கண் முன் தோன்றுகிறது. மனம் விட்டு இருவரும் அரசியல் உட்படப் பல விடயங்களைப் பற்றிக் கதைப்போம். தனது கருத்தை விட்டுக்கொடுக்காத போதிலும், மற்றவர்களின் அபிப்பிராயங்களைச் செவிமடுக்கும் மனப்பக்குவம் அவரிடம் இருந்தது. அவர் கனவு கண்ட சமுதாயம் நனவாகும் முன்பு அவர் காலமாகிவிட்டார். ஆனால் அவர் போன்றோர் மேற்கொண்ட முயற்சிகளால் அந்த இலட்சிய சமுதாயம் உருவாகும் நாள் நெருங்குகிறது. அந்த நாள் எந்நாளோ?

நீதியரசர் வனம் இராசரத்தினம் பின்வருமாறு எழுதினார் (பக்–198)

'நான் சட்டத்தரணியாகப் பணியாற்றத் தொடங்கிய ஆரம்ப கட்டத்திலும் அதன் பின்னரும் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கவாதிகளுக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மிகக் கடினான வழக்குகளில் எல்லாம் சுப்பிரமணியம் என்னை ஆஜராகும்படி செய்வித்தார். அந்தக் கட்டத்தில் அரசும் சமுதாயமும் தொழிலாளர்களையும் தொழிற்சங்கவாதிகளையும் பெரும் தொந்தரவுகளுக்கு உட்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் சுப்பிரமணியம் எல்லோர்க்கும் உற்சாகம் ஊட்டக்கூடிய தலைவராகவிருந்ததால், நாம் வழக்குகளில் தோற்பது மிகவும் அரிது. அவர் சார்பாக நான் ஆஜரான கடைசி வழக்கு சாவகச்சேரியில் ஆலயப் பிரவேசத்துடன் தொடர்புற்றிருந்த ஓர் வழக்கு. கிணறுகளை நச்சுப்படுத்துவதற்கு உயர் சாதியினர் முயன்றனர். ஆலய வளவிற்கு தாழ்த்தப்பட்டவர்கள் புகுவதைத் தடுப்பதற்கு பொலிசார் மேல்சாதியினருக்கு உதவி புரிந்து கொண்டிருந்தனர். தாழ்த்தப்பட்டவர்கள் தங்களை ஒழுங்கமைத்துக்கொண்டு இந்தப் படுமோசமான, ஈனத்தனமான செயலைச் செய்யாது பொலிசாரைத் தடுத்தனர். அவர்கள் பொலிசாரைத் தாக்கவும் செய்தனர். பரபரப்புமிக்க வழக்காக இது இருந்ததோடு, உயர் சாதியினர் நீதிமன்றத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர். நாம் வழக்கில் வென்றோம். உண்மையான தலைவராக சுப்பிரமணியம் இருந்ததால், சாதி அரக்கன் அட்டகாசம் செய்து வந்த பகுதியாய் இருந்த போதிலும், அவர் வழக்கினை நன்கு ஆயத்தம் செய்திருந்தார். சுப்பிரமணியம் அரசியலை நன்கு கற்றுத் தேர்ந்தவர். அவருக்கெனச் சொந்த அரசியல் தத்துவங்கள் இருந்தன. அவற்றை என்னுடன் அடிக்கடி பரிமாறிக் கொள்வார். எம்மிடையே அரசியல் சார்ந்த ஒரு சில கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும் அது நாம் இருவர் சந்திப்பதிலும் பயனுள்ள கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதிலும் தடையாய் இருக்கவில்லை. சுப்பிரமணியம் பாசமிக்க நண்பராய் இருந்தார். கொழும்பிற்கு வரும் போது என்னைச் சந்திக்கத் தவறமாட்டார். அவரது மகனைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. குடும்ப நண்பராகவும், நிதானமிக்க அரசியல்வாதியாகவும், பண்பு மிக்க மனிதராகவும் அவர் விளங்கினார். அவருடைய மறைவால் ஏற்பட்டுள்ள துயரத்தை அவரது குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் பகிர்ந்து கொள்கிறேன். சுப்பிரமணியம் ஓர் தேசபக்தன், மனிதாபிமானி,

மக்களை நேசித்தவர்; ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் தனது வாழ்நாள் பூராகவும் அடக்கியொடுக்கியவர்களுக்கு எதிராக அயராது போராடினார். வீரத்துடன் அவர் போராடினார். அவரது வாழ்வு மரணத்தை ஜெயித்துவிட்டது.'

1971 ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில்

கணவனே கண்கண்ட தெய்வம் என்பது அவரது நம்பிக்கை. "எங்கே புருஷன்? எங்கே போனவர்? தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சுட உத்தரவு" (பக்கம்–92) என்று 1971–ல் ஜே. வி. பி. கிளர்ச்சி காலத்தில் ஒரு நாள் வீட்டைச் சுற்றி வளைத்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் எச்சரித்தார்.

1965–மே–17–ல் றோகண விஜேவீர சீன சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி மக்கள் விடுதலை முன்னணியை (ஜே. வி.பி.) அமைத்தார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்காவும் அவர்களுடன் இணைந்தார். 1971–ஏப்ரல் கிளர்ச்சி தொடங்கியதனால் கட்சித்தலைவர் நா. சண்முகதாசன் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தில் கே. ஏ. சுவைத்தேடி வலை விரித்தனர் பொலீஸார்.

இதற்கு முதல் வருடம் கே.ஏ.சு முள்ளானை, விளான், இளவாலை பகுதிக் குச்சுக்கிராமங்களில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்திருந்தார்.

'அரசாங்கம் ஜே.வி.பி இயக்கத்தை 4000 இளைஞர்களை அழித்ததன் மூலமாக அடக்கி, ஒடுக்கிவிட்டது' தேடுதல் வேட்டை இல்லாமல் போனது தலைமறைவு ஒட்டங்களுக்கு இனி அவசியமில்லை. இருந்தும் தோழர் தன்னை அடையாளம் காட்டாமலே இருந்து வந்தார்.(பக்கம்–98) என வ.சு குறிப்பிடுகின்றார்.

வ.சு வின் நண்பர் ஒருவர் பொலீசில் சி.ஐ.டி யில் இருந்து ஓர் இரகசிய தகவலைத் தெரிவித்திருந்தார். " அண்ணை மீதும் ஒரு கண் விழுந்திட்டுது. பொலீஸ் வரும் போது அவர் வீட்டில் இருந்தால், கைது செய்து கொழும்புக்குத்தான் அனுப்புவாங்கள். பார்த்து நடக்கச் சொல்லுங்கள்" (பக்கம்–89) என்று எச்சரித்தார்.

(நூல்நயம் தொடரும்)

□

---

பயில்நிலம்
கவிதை

# எனக்கும் ஒரு தங்கை

*சாதனா*

எனது வீட்டில்
தனியாக முளைத்த பயிர்நான்!
நானே சகோதர சகோதரி!
விளையாட கதைக்க பொம்மைகளும்
நாய்களும் பூனைகளும்...
பாசையும் புரியாது பாசமும் தெரியாது
வாழ்வில் சோகம் – அழுகை
வெறுமை தனிமை மட்டும்!
இன்று என் தனிமை தீர்க்க
என் கைகோர்த்து நடக்க வந்தாய் நீ.



என்னோடு கதைக்க பலபேர்
நான் கதைக்க வந்தவள் நீ.
உனது குழந்தை மொழியிலும்
என்னை மயக்கும் சிரிப்பும்
எனக்கு நீதரும் இன்பம்.
என் சோகத்தில் பங்கெடுப்பவள் நீ
உன் நிழலாக பின் வருபவள் நான்.
எனது மனதிலிருந்து இருளை நீக்க
எனக்கும் ஒரு தங்கை.



# வேதாளமும் முருங்கையும்

**-4-**

***அசன்***

யாழ்மெயில் தனது இயல்பான தாளக்கட்டுடன் இரவை விரட்டியபடியே வடக்கு நோக்கி ஓடியது. வானம் வெளிக்க கறுத்து நிமிர்ந்த பனை வரிசைகள் காலை வணக்கம் சொல்லின. மாசிப்பனியால் புழுதி நிலத்தில் அடங்கிக் கிடந்தாலும் காற்று மண் வாசனையுடன் யன்னலால் ஊடுருவி விக்ரமாதித்தனின் முகத்திலிருந்த நித்திரைக் களைப்பைத் துடைத்தெறிந்தது. வாங்குக்கு கீழே சாரத்தோடு படுத்து கிடந்தவர் எழுந்து வேட்டிக்கு மாறினார். கொழும்பிலிருந்து யாழ் வருவதற்கிடையில் இவர் எடுத்த மூன்றாவது தோற்றம் இது. ஊரில் என்னும் எத்தனையோ? கொடிகாமத்தில் வடமராட்சி மக்கள் இறங்கியவுடன் இரயில் பெட்டிகள் பாதி வெறுமையாயின. கொழும்புக்கு போகும்போது தெல்லிப்பளையில் ஏறிய விக்ரமாதித்தன் வரும்போது யாழ்ப்பாணத்தில் இறங்கவேணுமென்பதை நினைவில் நிறுத்தினான். நாவற்குழி தாண்டி பாலத்தை கடந்து சங்கத்தானை புகையிரத நிலையத்தில் வண்டி நின்றதும் விக்ரமாதித்தன் இறங்குப்பெட்டியை கீழே இறக்கினான். அடுத்தது யாழ்பாணம்.

இவ்வளவு நேரமும் அமைதியாக பயணித்தவர்கள் யாழ்பாணத்தை கண்டதும் பள்ளி விட்டு ஓடும் பிள்ளைகள் போல் முண்டியடித்துக் கொண்டு வெளியே குதித்தனர். ஒரு கணம் கூட பொறுக்காது புகையிரத நிலையத்தை விட்டோடினர்.

மெயில் கொழும்புக்கு போகும்போது இதே யாழ் புகையிரத நிலைய மேடையில் பார்த்த முற்றிலும் முரணான காட்சிகளை விக்ரமாதித்தன் மீட்டெடுத்தான். போகும்போது மெயில் 20 நிமிடங்கள் யாழ்ப்பாணத்தில் தரித்து நிற்கும். அந்த இருபது நிமிட நேரத்தில் கணவரை அனுப்ப மனைவியரும், அப்பாவை அனுப்ப பிள்ளைகளும், பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்களும், நண்பர்களை அனுப்ப தோழர்களும் தோழியரும், காதலனை அனுப்ப காதலியரும் பெட்டி பெட்டியாய் கூடி பிரியாமல் விடை தந்தனர். கறுத்தக் கொழும்பானும் முருங்கைகாயும் பலாப்பழமும் இருக்கைக்கு மேல் உள்ள தட்டிகளை நிறைத்திருந்தது. மத்தியானம் புது மாப்பிளைக்காய் பலி கொடுக்கப்பட்ட கோழிக் குழம்போடு தேங்காய்ப் புட்டும், முட்டை பொரியலோடு இடியப்ப பாசல்களும் மெயிலுக்கு வாசம்சேர்த்தது. யாழ் மெயிலுக்கு வாய்த்த மணம் இயற்கையானதா? இல்லை யாழ்ப்பாணத்தவர்களால் காலம் காலமாக ஏற்றப்பட்ட பலகாரங்களாலும் பழங்களாலும் உருவான மணமா என்பது இலக்கிய விவாதத்துக்குரியது. பிரிய மனமில்லாத இளசுகள் மெயில் புறப்பட்ட பின்னரும் அதனோடு சேர்ந்து வேகமெடுக்கும்வரை ஓடினர். மற்றவர்கள் மெயில் கண்ணில் மறையும்வரை மேடையில் காத்திருந்தனர். ஆனால் அதே மேடை இப்போது மெயில் வந்த ஓரிரு நிமிடங்களில் ஆள் அவரமின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது.

பண்டத்தரிப்பு பஸ் மணிக்கு ஒன்றுதான். ஒன்றை விட்டால் அடுத்ததிற்கு ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும். எதிர்பார்த்தது போலவே விக்ரமாதித்தன் பஸ் நிலையத்திற்கு செல்ல அதுவும் புறப்பட்டது. இறங்குப்பெட்டியோடு ஓடிப்பிடிப்பது சாத்தியமில்லை. ஒரு மணித்தியாலம் காத்திருப்பதை விட காரைநகர் பஸ்ஸை பிடித்து வடக்கம்பரையில் இறங்கி நடக்கலாம். நடை கூடத்தான். ஆனாலும் நனவிடை தோயலாம். வடக்கம்பரையில் இறங்கி பண்ணாகத்தை ஊடறுத்து காயாப்பனை தாண்டி காலையடியில் மிதப்பதில் விக்கிரமாதித்தனுக்கு களைப்பு தெரிவதில்லை. விக்டோரியாக் கல்லூரியில் கற்ற வேளையில் தினமும் நடந்த பாதை. ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு மதிலும் ஒவ்வொரு மரமும் அவனிடம் குசலம் விசாரிப்பதாக ஒரு நினைப்பு.



காரைநகர் பஸ்சும்அவனுக்காக காத்திருந்தது போல் அவன் ஏறியதும் புறப்பட்டது.

வடக்கம்பரை அம்மன் கோயிலுக்கு முன்னால் உள்ள தரிப்பில் பஸ் நின்றதும் ஊரை கண்ட உற்சாகத்தில் வேதாளம் வெளியே வந்து விக்ரமாதித்தனின் தோளில் சுற்றிப் படர்ந்தது. மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தின் பக்கத்தால் செல்லும் கலட்டி ஒழுங்கையில் இறங்கினான். மண்டபம் 1976 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு விக்ரமாதித்தன் நினைப்பை இழுத்துச்சென்றது. இந்தச் சின்ன மண்டபத்தில் நடந்த மாநாடுதான் முழு நாட்டினதும் முக்கியமாக ஈழத் தமிழர்களினது தலைவிதியை மாற்றி அமைக்கப் போகிறதென்பதை அன்று மண்டபத்திற்கு உள்ளே இருந்தவர்களும் வெளியே இருந்தவர்களும் கற்பனை கூட செய்து பார்த்திருக்க மாட்டார்கள்.

விக்கிரமாதித்தனுக்கு அரசியல் பற்றி எதுவும் தெரியாது. வருசத்துக்கு ஒருமுறை யாழ்ப்பாணத்தில் நடக்கும் மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதே அவனின் ஒரேயொரு அரசியல் செயற்பாடு. மன்றத்தவர்கள் கூட்டிக்கொண்டு போவார்கள். சிவப்பு கொடிகளோடு உணர்வுபூர்வமாக அவன் வயதொத்தவர்கள் கோசம் எழுப்பும்போது விக்ரமாதித்தனும் அதன் வயப்பட்டுவிடுவான். அந்நிய சித்தாத்தங்களுக்கு அடிமையாகக் கூடாது என்று வேதாளம் அவனை எச்சரித்தாலும் அவன் அதை பொருட்படுத்தியதில்லை. 1976 மே 13 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொகுதி எங்கும் உள்ள சுவர்கள் எல்லாம் சிவப்பு மஞ்சள் உதய சூரியன் போஸ்டர்களால் மறைக்கப்பட்டிருந்தன. மெய்கண்டான் பாடசாலையைச் சுற்றி தோரணங்களும் மாவிலைகளும் வரிசை கட்டின. ஏதோ அரசியல் திருவிழா என விக்ரமாதித்தன் கணித்தான். அன்று இரவு சாமத்தில் மன்றப் பொடியள் இரகசியமாக வந்து அவன் படுக்கும் அறையின் யன்னலை தட்டி எழுப்பினர். ஏற்கனவே சொல்லியிருந்தாலும் விக்ரமாதித்தன் மறந்து விட்டான்.

"நடுச் சாமத்திலை என்ன அலுவல். ஏன் என்னை எழுப்பிறியள்."

"உனக்கு நேற்றே சொன்னதுதானே."

"ஓமோம். ஆனால் சாமத்திலே எண்டு சொல்லேல்லை."

"இப்ப சொல்லுறோம். இந்தா. இந்த நோட்டிசுகளையும் பசை வாளியையும் எடு. ராசனோடை போ. அவனுக்கு தெரியும் நீங்கள் கவர் பண்ண

வேண்டிய பகுதி. பொழுது விடிய வட்டுகோட்டை தொகுதியிலை ஒரு உதய சூரியன் நோட்டீசும் இருக்கக் கூடாது. எல்லாத்தையும் கிழிச்சுப் போட்டு இந்த நோட்டிசுகளை ஒட்டவேணும்."

இதற்கு முதல் இப்பிடி நடு சாமத்திலை விக்ரமாதித்தனை கூப்பிட்டதில்லை. இந்த முறை கூப்பிட்ட படியால் முக்கியமான விசயமாய் இருக்க வேணும். எந்த மறுப்பும் சொல்லாமல் ராசனோடு புறப்பட்டான். சிவப்பு மஞ்சள் வண்ணத்தில் உதய சூரியனும் சேவலும் வரைந்த போஸ்ற்றர்கள் ஊர் முழுக்க நிரவிக் கிடந்தது. இப்பதான் வாசித்து பார்த்தான். அதிலுள்ள வாசகங்களின் படி தமிழர்களுக்கு ஒரு தமிழ் ஈழம் அமைக்க வடக்கம்பரையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என புரிந்துகொண்டான். மாநாடு அடுத்த நாள் காலை. தாங்கள் ஓட்ட வேண்டிய போஸ்ற்றர்களில் உள்ள வாசகங்களை படித்துப் பார்த்தான்.

"வட்டுகோட்டை தீர்மானம் வாக்கு வேட்டை தீர்மானம்'

"தமிழ் ஈழம் தமிழர்களை ஏமாற்றும் தேர்தல் கோசம்"

"தெருவில் வெற்றிபெற தெருவில் முழக்கம். வாக்குகள் பெ வட்டு மாநாடு"

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள உதயசூரியன்களை முற்றாக அகற்றி முடிய காலை மூன்று மணியாகிவிட்டது. இறுதியாக சித்தன்கேணி சந்தியடியில் மிஞ்சிய போஸ்ற்றர்களை ஒட்டும்போது இராணுவ வாகனம் முன்னால் வந்தது. இவர்கள் இருவரையும் கண்டதும் வாகனம் நின்றது. வாகனத்தில் இருந்து எட்டிப்பார்த்த இராணுவத்தான் சிங்களத்தில் ஏதோ கேட்டான். சினிமா போஸ்டர் என்று ஏற்கனவே தயார் செய்த பதிலை ராசன் சொன்னான். விக்ரமாதித்தன் இதற்கு முதல் இராணுவத்தினரைக் கண்டதே இல்லை. இவர்கள் என்ன செய்வார்களோ என்று பயந்த வேளை அவர்கள் போஸ்ற்றர்களை வாங்கி வாசிக்க முனைந்து இயலாமல் விட்டகன்றனர்.

அடுத்த நாள் விடிய வெவ்வேறு மாவட்டங் களிருந்து வந்த பிரதிநிதிகளை வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள இந்தச் சுவரொட்டிகளே வரவேற்றன. உதயசூரியன்கள் ஒட்டுமொத்தமாக துலைந்தது போயின.

இரவு நடவடிக்கைகளால் உற்சாகமான விக்ரமாதித்தன் அடுத்தநாள் என்ன நடக்கிறது என்று பார்க்க மன்றத்து இளைஞர்களுடன் வடக்கம்பரை சென்றான். மன்றத்து இளைஞர்களைக் கண்டதும் மண்டபத்துக்கு முன்னால் பந்தல் போட்டிருந்த பண்ணாகத்து இளங்கோவிற்கு தைரியம் அதிக மாகியது. உடனே அந்தக் காலத்தில் பிரபல்யமாயிருந்த 'நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்' என்ற பாட்டை உச்ச சத்தத்தில் ஒலிபெருக்கியில் போட்டுவிட்டான். ஏற்கனவே மண்டபத்திற்கு உள்ளே மூத்த தலைவர்களுக்கு எதிராக இளையவர்கள் முறுகிக் கொண்டிருந்ததால் வெறுபேற்றிக்கொண்டிருந்த பண்ணகத்து பண்டிதர் ஒருவர் வெளியே வந்து இளங்கோவை காலால் எட்டி உதைந்தார். பின்னர் இளங்கோவிற்கு ஆதரவாக மன்றத்தவர்கள் நிற்பதை கண்டவுடன் திட்டிக்கொண்டு பின் வாங்கினார்.

உள்ளே இளைஞர்கள் கொதித்துக்கொண்டிருப் பதாகவும் விசுவாசமில்லாமல் தேர்தலுக்காகவே தனி நாடு கோசம் போடுவதாக மூத்த தலைவர்களை குற்றம் சாடுவதாகவும் பேசிக்கொண்டார்கள். அதிலும் இளைஞர்களின் தலைவர் முதுபெரும் தலைவரை நோக்கி கை நீட்டிப் பேசியதால் அடுத்த கட்ட தலைவர்கள் கடும் சினம் கொண்டு அடிக்கப்போனபோது மற்றவர்கள் தடுத்தது விட்டனர். இதனால் உடனடியாக தமிழ் ஈழம் அமைப்பது என்று தடாலடியாக தீர்மானம் போட்டுவிட்டார்களாம். அத்தோடு அன்றைய திருவிழா இனிதாக முடிந்தது. மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தை பார்க்கும்போதெல்லாம் விக்கிரமாதித்தனுக்கு அந்த திருவிழா ஞாபகத்து வரும். அத்தோடு கூட அதற்கெதிராக மன்றத்தாருடன் சேர்ந்து செய்த சுவரொட்டி போராட்டமும் ஞாபகத்துக்கு வந்தது. அன்று இளைஞர்கள் தலைவர்களுக்கெதிராக உணர்ச்சிவசப்பட்டு பேசியதற்கு இந்த சுவரொட்டிகள் தான் காரணமோ என அவனுக்கு தெரியாது.

இந்த நினைவுகளையும் சுமந்து இறங்குப் பெட்டியோடு காயாபனையையும் கடந்தாகிவிட்டது. பள்ளிக்கு போகும் நாட்களில் காயாப்பனை எனப்படும் பனைகள் நிறைந்த இந்த வெளியை கடக்க நீண்டநேரம் எடுக்கும். மழை காலம் என்றால் சொல்லத் தேவையில்லை. வெள்ளத்துக்குள்ளே விளையாடி சண்டைகள் பிடித்து இழுபறிப்பட்டு அதை விட்டு வெளியேற மனமில்லாமல் வெளியேறுவர். காயாபனையை தாண்டியவுடன் மிக அடக்கமான ஒழுங்கான பள்ளிபிள்ளைகள் போல் வீடு வரை கோலம் காட்டுவர்.

இவ்வாறே விக்ரமாதித்தனின் இரயில் பயணமும் வேதாளம் கதை சொல்லும் வழக்கமும் ஆரம்பமாகியது. அவனின் முதல் யாழ். மெயில் அனுபவமே இறுதியானதாகவும் அமைந்தது வரலாற்றில் குறிக்கவேண்டியது.

தொடரும்

## இலங்கைச் தமிழ் சிறுவர் இலக்கிய ஆளுமைகளின் “பகிர்தலும்,பரவலாக்கலும்

## K A S சத்தியமனை நூலகம் சில பதிவுகள்- 19.102025















தேசிய கலை இலக்கியப்
பேரவை செயற்பாட்டாளர்
எழுத்தாளர்
மாவைவரோதயன் 60வது
பிறந்த நாள் நினைவு



தேசிய கலை இலக்கியப்
பேரவை செயற்பாட்டாளர்
வ. சிவஜோதி நினைவு
54வது பிறந்தநாள்
நினைவு

**தேசிய கலை இலக்கியப் பேரவை 28வது புத்தக அரங்கத் திருவிழா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் 2025 ஒக்ரோபர் 3, 4 திகதிகளில் நடைபெற்றது**













